விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU
Ria
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-641)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 26 புதன்கிழமை (11.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

### கொரோனாவால் மேலும்

## 5 பேர் பலி

### உயிரிழப்பு 41ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 41ஆக உயர்ந்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

### கொரோனாவால் உயிரிழக்கும்

## முஸ்லிம்களின் உடல்கள் மன்னாரில் அடக்கம்?

(கொழும்பு)

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை மன்னா 19

### ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 85 ரூபாய்

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நேற்று முதல் ஒரு கிலோ சீனியின் அதிகபட்ச சில்லறைவிலையை 19

## குழிக்குள் விழுந்து சிறுமி மரணம்



### வவுனியாவில் பரிதாபம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பன் றிக் கெய் த குளம் 19

### வடமராட்சி கடற்பரப்பில்

## 18 இந்திய மீனவர்கள் கரையொதுங்கினர்

(கரணவாய்)

தமிழ்நாட்டிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக 18 மீனவர்கள் வடமராட்சிக் கிழக்கு கடற் 19

### மிருசுவில் பகுதியில்

## விபசார விடுதி சுற்றிவளைப்பு

### நால்வர் கைது

(கரணவாய்)

மிருசுவில் கரம்பகம் பகுதியில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டதில் நான்கு பேர் கைது செய்யப்பட் 19

# கொரோனா மரணங்கள் மேலும் அதிகரிக்கும்!

### தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் முன்னாள் இயக்குநர் வைத்தியர் நிஹால் அபேசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் பதிவான அனைத்து கொரோனா மரணங்களுக்கும் அடிப்படையாக இருந்த காரணத்தை உடனடியாக கண்டு பிடிக்க வேண்டும். அப்படி கண்டுபிடிக்கவில்லை என்றால் மரணங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்படும் என தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் முன்னாள் இயக்குநர் வைத்தியர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அனைத்து கொரோனா தொற்றாளர்களின் மரணத்திற்கும் அடிப்படையான காரணம் ஒன்று உள்ளது.

இதற்கான காரணத்தை அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும். இந்த நாட்டில் இரண்டாவது கொரோனா அலை முதல் கொரோனா அலையை விடவும் வித்தியாசமான முறையில் கட்டுப்படுத்த 19



### பஸ் கட்டணங்கள்

## இன்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கோவிட் - 19 நிலைமை காரணமாக, இன்று புதன்கிழமை முதல் மூன்று எச்சரிக்கை நிலைகளின் கீழ் பேருந்துக் கட்டணங்களை திருத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 19

## அபாயம் இல்லையென மக்கள் அசமந்தமாக செயற்படுகின்றனர்

### அரச மருத்துவ அதிகாரிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து, வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் பாதிப்புக்கள் குறைவு என்று பொது மக்கள் மத்தியில் அநாவசிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், அடிப்படை சுகா 19

### ஐ.பி.எல் தொடரில் 5ஆவது தடவையாக

## கிண்ணத்தை சுவீகரித்தது மும்பை




13ஆவது பருவ காலத்துக்கான ஐ.பி.எல் தொடரில் மும்பை அணி 5ஆவது தடவையாக மகுடம் தரித்தது. நேற்று அபுதாபியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் டில்லி அணியை 5 விக்கெட்டுக்களால் வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது.

### மண்டைதீவுப் பகுதியில்

## காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மூன்று சந்திப் பகுதியில் தனியாரின் காணியை கடற்படைக்காக சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை 19

### நேற்று மட்டும்

## 430 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நேற்று மட்டும் 430 பேருக்கு 19

## கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களை நல்லடக்கம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கவில்லை

### அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

கோவிட்-19 நோய்த் தொற்றினால் உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாசா நல்லடக்கம் தொடர்பில் நேற்று முன்தினம் முதல் சமூக ஊடகங்களிலும் ஏனைய ஊடகங்களிலும் பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவினால் உயிரிழந்த இஸ்லாமியர்களின் ஜனாசா நல்லடக்கம் தொடர்பில் அமைச்சரவையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வது குறித்து சுகாதாரத் தரப்பினர் மற்றும் உரிய தரப்பினர் அனுமதிவழங்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து ஜனாசா நல்லடக்கங்களை ஓர் உலர் பிரதேசத்தில் மேற்கொள்வது குறித்த சாத்தியப்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது எனவும், இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசிடம் முறையான திட்டமில்லை

### மைத்திரி குற்றச்சாட்டு

(ஹட்டன்)

கொரோனா தொற்றை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் முறையான திட்டமில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்று நாடு ஊரடங்கு தளர்த்தப்பட்டு திறந்து விடப்பட்டுள்ள போதிலும் மக்கள் அச்சம் காரணமாக வீதிகளுக்கு வர அச்சம் கொண்டுள்ளதை நான் கொழும்பிலிருந்து ஹட்டன் வரும் வழியில் காணக்கிடைத்தது.

கொரோனா தொற்றுக்கான மருந்துகள் இல்லை, பரிசோதனை இயந்திரம் இல்லை, முறையான திட்டமில்லை என சுகாதார அமைச்சின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். ஆகவே தான் தொழிலுக்கு செல்லாது வீடுகளுக்குள்ளேயே இருக்கும் நிலைக்கு வந்துள்ளனர். கொரோனா தொற்று முதன் முதலில் ஆரம்பித்த போது அரசாங்கம் விட்ட தவறே இன்று இவ்வளவு பாரதூரமான நிலைக்கு நாடு சென்றுள்ளதற்கு காரணம் என்றார்.

ஆகவே கொரோனா தொற்று அச்சம் காணப்படும் பிரதேசங்கள் அல்லது நாடளாவிய ரீதியிலாவது இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு மூடி இதற்கான முறையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## யாழ். மாநகர சபை உறுப்பினர்களை முன்னணியிலிருந்து நீக்கும் முடிவிற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை உறுப்பினர்களான டென்ஷி, தர்சிபா ஆகியோரை அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்து நீக்கும் முடிவிற்கு, யாழ். நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

மணிவண்ணன் ஆதரவாளர்கள் எனக் காரணம் குறிப்பிட்டு, யாழ். மாநகர சபை உறுப்பினர்களான டென்ஷி, தர்சிபா ஆகியோரை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், கட்சியிலிருந்து நீக்கியது. அரசியலில் பெண் பிரதிநிதித்துவம் அரிதாக இருக்கும் நிலையில், தனிப்பட்ட ஓரிருவரின் விருப்பு வெறுப்பினால் உருவாகியுள்ள நிலைமைக்கு, காரணமில்லாமல் பெண் உறுப்பினர்களை ஏன் பலியிட வேண்டுமென கட்சிக்குள் பலர் சுட்டிக்காட்டிய போதும், எதையும் கருத்தில் எடுக்காமல் காங்கிரஸ் அவர்களை நீக்கியது.

இந்த நிலையில் நீக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். முறைப்பாட்டாளர்கள் சார்பில் சட்டத்தரணி ரிஷிகேஷினி முன்னிலையானார்.

இருவரையும் கட்சியை விட்டு நீக்கும் முடிவிற்கு 14 நாட்கள் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மீளவும் 24 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஞா)

## கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்ட 18 பேர் குணமாகி வீடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று குணமடைந்த 18 பேர் நேற்றைய தினம் அவர்களது வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் குறித்த சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று குணமடைந்தோர் கொரோனா தடுப்பு ஆலோசனை மற்றும் நோய் நிர்ணய அட்டைகள் வழங்கப்பட்டு மரக் கன்றுகளும் வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இதன்போது பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நேரில் கலந்து கொண்டு வழியனுப்பி வைத்தார். (ஞா)

## 105 கிலோ கஞ்சா மாதகல் கடலில் மீட்பு

### கடத்தியோர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்ட 105 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் மாதகல் கடற்பரப்பில் படகு ஒன்றில் வைத்து மீட்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

படகில் பயணித்த மீனவர்கள், தப்பித்துள்ளனர். அதனால் படகின் உரிமையாளர் கடற்படையினரால் தேடப்படுகின்றார்.

இந்த நடவடிக்கை நேற்று காலை இடம்பெற்றதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

படகும் மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருளும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஞா)


ஓராண்டு நினைவு நாள்



சிவானந்தமூர்த்தி புகலவன்



எத்தனை ஆண்டு சென்றாலும்
உன்னைப்போல் ஓர் தெய்வம் யார்? அடகண்ணா!
நீ உறங்கினாலும் உன் புன்னகை, குரல் உறங்காதே
எம் செல்லம் எம் வாழ்வில் வந்த புனிதக் குழந்தை.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

சுவிஸ் (C-662) உன் பிரிவால் வாடும்... சித்தப்பா, அன்ரி



கலண்டர் ( நாட்காட்டிகள் )

வியாபார நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், அச்சகத்தினருக்கு தேவையான சாந்தி மாதாந்த வாக்கிய பஞ்சாங்க கலண்டர்கள், படக்கலண்டர்கள், மாதாந்த தனிக் கலண்டர்கள் சகலவித மான அளவுகளில் எம்மிடம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சிவ தயா அச்சகம்
92 (150), நாவலர் றோட் (N.S.B வங்கி அருகில் ), மனோகரா சந்தி (யாழ்ப்பாணம்) (4617)
077 641 3568, 077 396 5214
021 221 9483



கண்ணீர் அஞ்சலி



எமது சக தோழர்
செ. சுதன் (கிளை முகாமையாளர் – நல்லூர் ப.நோ.கூ.ச )
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
செல்வரத்தினம் இராசலட்சுமி
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 24.01.1948 இறப்பு 10.11.2020 (4618)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை : நல்லூர் ப. நோ கூ. ச



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# காணிகள் பறிபோகும் அபாயம் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும்

## சாணக்கியன் அழைப்பு

**(கொழும்பு)**
**சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் ஏற்படுத்துமானால் அதற்கு எதிராக குரல் கொடுக்க தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார்.**

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபையின் 33 ஆவது மாதாந்த அமர்வில் புதிய ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் வெற்றி பெற்ற நிலையில் அதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், " தமிழ் மக்கள் வாழும் அனைத்து பிரதேசங்களிலும் காணி அபகரிப்பு மிகவும் வேகமாக நடைபெற்று கொண்டிருக்கிறது. இதற்காக தமிழ் மக்கள் ஒன்று பட வேண்டும்.



எமது பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதற்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் இனிவரும் காலங்களில் பிரிந்து நிற்கக் கூடாது.

உண்மையில் நீங்கள் தமிழராக இருந்தால்,தமிழ் தாய்க்கு பிறந்தவர்களாக இருந்தால் இந்த அரசாங்கத்தில் அநீதிகள் ஏதேனும் இடம் பெற்றால் அதற்கு எதிராக குரல் கொடுக்க ஒன்றிணைய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-4)

## பண்டிகைக்கால அங்காடி வியாபாரம் முற்றாகத் தடை; மீறினால் சட்ட நடவடிக்கை- யாழ்.மாநகர முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வருடாவருடம் வழமையாக யாழ்ப்பாணம் மாநகரசபையினால் அனுமதிக்கப்படும் "பண்டிகைக்கால அங்காடி" வியாபாரத்திற்கு இம்முறை முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகர முதல்வர் ஆனோல்ட் தெரிவித்தார்.

கொவிட்-19 தாக்கத்திலிருந்து யாழ்.மாநகரத்தையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் வகையில் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வரும் முன்னாயத்த நடவடிக்கைகளின் தொடராக சுகாதாரத்துறையினர் மற்றும் மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை கருத்திற்கொண்டு இம்முறை பண்டிகைக்கால அங்காடி வியாபாரம் முற்றாகத் தடை செய்யப் படுகின்றது.

தடையை மீறி யாரேனும் நடைபாதைகளில், வீதியோரங்களில், யாழ்.நகர்ப்பகுதிகளில் மற்றும் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் "நடைபாதை வியாபார நடவடிக்கைகளில்" ஈடுபடுவது குறித்து எமது மாநகர வருமானவரிப் பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்படுமிடத்து குறித்த விற்பனைப் பொருட்கள் மாநகரசபையினால் கையகப்படுத்தப்படுவதுடன் அவை மீள ஒப்படைக்கப் படமாட்டாது. மேலும் வியாபார நடவடிக் கையில் ஈடுபட்ட உரிய நபர்கள் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே மாநகர குடியிருப்பாளர்கள், பண்டிகைக்கால நடைபாதை வியாபாரிகள், வெளிமாவட்ட பண்டிகைக்கால அங் காடி வியாபாரிகள் என அனைவரும் இவ்விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்படு மாறு மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார். (நி-4)

## அமெரிக்காவின் புதிய தலைவர்களால் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)
அமெரிக்காவின் புதிய தலைவர்கள் எம் தமிழர்களுக்கும் நீதி கிடைப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி மற்றும் துணை ஜனா திப தியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முகமாக ஊடகங்களுக்கு நேற்று அனுப்பிய அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கான 46 ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடந்து முடிவடைந்துள்ளது. ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோஸப் றொபினட் பிடன் ஜனாதிபதியாகவும் தமிழரான கமலா ஹரிஸ் துணை ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஈழத் தமிழ் மக்களின் இதயபூர்வ வாழ்த்துக்கள்.

ஆபிரிக்க கறுப்பின வழித்தோன்றலான ஒபாமாவை ஜனாதிபதியாக்கி அழகுபார்த்த அமெரிக்க மக்கள், தென்னாசியாவைச் சேர்ந்த பெண் ஒருவரை துணை ஜனாதிபதியாக்கி ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கியுள்ளனர்.


தேர்தலில் வென்ற அமெரிக்கத் தலைவர்களுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பும் இலங்கையின் அரசியல் தலைவர்கள், இந்தப் புதுமைகளையும் பழகிக் கொள்ளவேண்டும்.

யுத்தத்தால் மிகவும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருந்த ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி வேண்டி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முன்னின்று உழைத்ததை நாங்கள் நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

உலகமெல்லாம் மனித உரிமைக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் குரல் கொடுக்கும் அமெரிக்க ஜனநாயகக் கட்சியினரும் அதில் தெரிவு செய்யப்பட்ட இன்றைய தலைவர்களான ஜோ பிடன் மற்றும் கமலா ஹரிஸ் போன்றவர்கள் பாதிக்கப்பட்ட மற்றும் நீதி கோரி நிற்கும் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண்டுமெனவும் அவர்களது இழப்புகளுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஒரு சர்வதேச விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு, அவர்களுக்கான நீதி மற்றும் நிவாரணம் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் குறித்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-4)

## வீட்டிலிருந்து தீபாளியை கொண்டாடுங்கள்

(யாழ்ப்பாணம்)
தீபாவளிப் பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாக கொண்டாட வேண்டும்என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.



இது குறித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள அவர், "எதிர்வரும் 14ஆம் திகதி இந்து மக்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட இருக்கின்றது.

இச் சூழ்நிலையில் நாட்டில் கொரோனா தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்றது. கொரோனா தொற்று நோயினால் பல இறப்புகளும் அடுத்தடுத்து ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தீபாவளிப் பண்டிகைக்காக பொதுமக்கள் பெருமளவில் ஒன்றுகூடும் பொழுது இந்நோய் எமது பிரதேசத்திலும் தீவிரமாகப் பரவும் வாய்ப்புள்ளது.

எனவே இத் தீபாவளிப் பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாக கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதன்மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

எனவே நாம் அனைவரும் சமூகப் பொறுப்புடன் அமைதியாக வீட்டிலிருந்து எமது இத் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவோம்" என குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## கட்டுப்பாட்டு விலையில் அரிசி

### அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)
மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் பொறுப்பிலுள்ள நெல் மற்றும் நெற்சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள நெல் என்பனவற்றை அரிசியாக மாற்றி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாட்டையும் உத்தரவாத விலைக்கு போதுமான அரிசியை வழங்க அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் முன் வராமையினால் அரசாங்கம் இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆகவே குறித்த அரிசியினை சதொச விற்பனை நிலையங்கள் மூலம் கட்டுப்பாட்டு விலைக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-4)

# இந்தியப் படகுகளை அழிக்க அதிகாரம் இல்லை

## சட்டமா அதிபர் விளக்கம்



**(கொழும்பு) இலங்கைக் கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த 121 படகுகளை அழிப்பதற்கு சட்டத்தின் பிரகாரம் அதிகாரம் இல்லை என்றும், அவற்றை கிருமி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுத்து அதன் பின்னர் உரிய தரப்பினருடன் பேசி தீர்வு காணப்பட வேண்டும் என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா அறிவித்துள்ளார்.**

பதில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள தெளிவுபடுத்தல் கடிதத்தில் சட்டமா அதிபர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1925 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு ஒழுங்குகளில் 70 ஆவது ஒழுங்கிற்கமைய படகினுள் காணப்படும் பாகங்களை நீக்க முடியும். எனினும் குறித்த படகுகளை தீயிட்டு அழிப்பதற்கு அதிகாரம் இல்லை.

எனவே குறித்த படகுகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையானது, கிருமி நீக்கத்திற்குட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகும்.

அதற்கமைய கிருமி நீக்கல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து உரிய தரப்பினரிடம் படகுகள் குறித்து பேசி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இலங்கை மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை கடற்பகுதிக்கு, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட படகுகளை இவ்வாறு அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 94 படகுகளும், மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 27 படகுகளும் அழிக்கப்பட உள்ளன.

மொத்தம் 121 படகுகள் நீண்டகாலமாக, கடலிலேயே கிடப்பதால் பல பாதிப்புகள் ஏற்படுவதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கில், இலங்கை நீதிமன்றங்கள் படகுகளை அழிப்பதற்கு உத்தரவிட்டுள்ளதாக இலங்கை நீரியல் துறை தெரிவித்துள்ளதாகவும் நியூஸ் 7 மற்றும் த இந்து ஆகிய இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஜ-4)

---

# வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது.

குறித்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிர்வரும் 24 ஆம் திகதிவரை வழக்கை ஒத்தி வைத்தார். (ஜ-4)

---

# ஹொரணை ஆடைத்தொழிற்சாலை; எகிறும் தொற்றாளர் எண்ணிக்கை

(ஹொரணை)

ஹொரணை பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் புதிதாக 38 பேருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

இதற்கமைய அந்த ஆடைத் தொழிற்சாலையில் தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளது. (நி-4)

---

# வரவு-செலவுத்திட்டம் விரைவில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கட்சித் தலைவர்களின் ஒருமித்த முடிவுக்கு பின்னர் 2021 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மூலத்தை எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கூடியிருந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்த முடிவினை எட்டியதாக பாராளுமன்ற பிரதி கொறடா டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் குறித்து நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

---

# கொரோனா தடுப்பில் வெற்றிபெற்ற அரசு இரண்டாவது அலையை கட்டுப்படுத்த தவறிவிட்டது

## உயிரிழப்புகள் மறைக்கப்படுவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் மறைப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, நாட்டின் எதிர்க்கட்சி என்ற வகையில் இந்த தொற்று நோய் சூழ்நிலையில் மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் தொடர்பாக தெரிவிப்பதற்கு ஒரு அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது என்று தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு மாத்திரம், ராஜகிரிய, கம்பஹா, குருநாகல் ஆகிய பகுதிகளில் 4 மரணங்கள் பதிவாகியிருந்தன என்றும் எனினும் இது தொடர்பாக அறிவிக்கப்படவோ, மொத்த இறந்தோரின் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் மரணச் சான்றிதழ், ஐக்கிய மக்கள் சக்தியிடம் உண்டு என்றும் அதில் இறப்புக்கு கொரோனா வைரஸே காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், நாட்டை கொரோனா வைரஸில் இருந்து காப்பதற்கான முயற்சியை அரசாங்கம் கைவிட்டுள்ளது என்பது தென்படுவதாகவும் இது, நாட்டை பேரழிவுக்குள் இட்டுச் செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் முதலாவது கொரோனா வைரஸ் நெருக்கடியின்போது கொரோனாவைக் கட்டுப்படுத்தி வெற்றியாளர் கிண்ணத்தை ஜனாதிபதி சுவீகரித்தார் எனினும், இந்த வைரஸ் தொடர்பாக உலக நாடுகள் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற நிலையில், இரண்டாவது அலை அபாயத்தின் போது, இலங்கை அரசாங்கம் அதைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

---

# மறியல் நீடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனை நாளை மறுதினம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரிசாத் பதியுதீன் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

---

# இரகசிய விருந்துபசாரத்தால் சர்ச்சை

(கொழும்பு)

யுக்ரேன் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகில் உள்ள 5 நட்சத்திரக் ஹோட்டலில் விருந்து நடத்தப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் தங்கள் சங்கத்திடம் சாட்சிகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்ட யுக்ரேன் விமான ஊழியர்கள் மூலம் நாட்டில் கொரோனா பரவல் ஏற்பட்டதாக இதுவரையில் சந்தேகம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த விருந்துகள் தொடர்பில் உடனடியாக விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு விசாரணை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

எனினும் இந்த குற்றச்சாட்டினை குறித்த ஹோட்டல் முகாமையாளர் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மரண அறிவித்தல்



## திருமதி
## பத்மநாதன் ஈஸ்வரி (சுசி)

**தோற்றம்** 26.12.1960 **மறைவு** 10.11.2020

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் ஈஸ்வரி 10.11.2020 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா- இரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து- அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து- பத்மநாதனின் (ஆங்கில ஆசிரியர்) பாசமிகு மனைவியும் ப.விதுஷன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்), ப.நிருஷன் (லக்ஷ்மி கலர் லாப், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுஜித்தாவின் (பிரான்ஸ்) அன்பு மாமியாரும் நடராசா (அமரர்), தங்கராசா (கனடா), இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, மனோகரன், சிறீகரன் (பிரான்ஸ்), கருணாகரன் (பிரான்ஸ்), ரதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராசலிங்கம் மற்றும் அமரர்களான வடிவேலு, சிவசம்பு, பரமேஸ்வரி, புஸ்பமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.11.2020 (புதன்கிழமை) இன்று முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.**

(C-651)

தகவல்:
குடும்பத்தினர்

சுசி டிஜிற்றல் & டெக்கரேசன்ஸ்,
சுதுமலை தெற்கு,ஆனைக்கோட்டை.
0770517625

# மாமனிதர் ரவிராஜின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல்



(சாவகச்சேரி)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். மாமனிதர் நடராஜா ரவிராஜின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை காலை சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள அவரின் உருவச்சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

அஞ்சலி நிகழ்வில் ஈகச் சுடரினை ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் ஏற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து இலங்கை தமி ழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன் , கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், சாவ கச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் வாமதேவன், சட்டத்தரணி மணிவண்ணன், மற வன்புலோ சச்சிதானந்தம், தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் அருந்தவபாலன், பாலகுமாரக் குருக்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் கள், ரவிராஜின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (5-4-30-18-33)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, அருள்மிகு கதிர்காமர் ஆலய மண்ட லாபிஷேக பூர்த்தி விழா நாளை மறுதினம் 13 திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி மஹாகும்பாபிஷேகம் நடை பெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது.

13 ஆம் திகதி காலை 1008 சங்காபிஷேகம் நடைபெறும். பின்பு மாலை திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி வீதியுலா வருதலும் இடம் பெறவுள்ளது. (5)

## கடல் நீர் உட்புகுந்ததனால் 85 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரையை அண்டிய சில பகுதிகளின், வீடுகளுக்குள் கடல் நீர் உட்புகுந்ததால் 85 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறை ஜே/ 61 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள எழிலூர், மகேந்திரபுரம் கிராமங்களில், சுமார் 50 குடும்பம் பாதிக்கப்பட்டுள்ளதோடு 3 குடும்பங்கள் உறவினர்கள் வீடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்தோடு ஜே/ 68 கிராம உத்தியோகத்தர் பிரிவில், தொடர்மாடி அருகாமை கிழக்கு பகுதியில் சுமார் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளை யாழ்.



மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சூரியராஜா நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்தோடு யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் குறித்த பகுதிகளை பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. . (5-4-33)



கரவெட்டி கரவை வெல் லன் விநாயகர் ஆலய வீதியில் பொதுமக்களால் மரக்கன்றுகள் அண்மையில் நாட்டப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)




யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்தினர் யாழ்.நகரப் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுத்தனர். இதில் கை கழுவுவதற்கான சனிடைசர் வழங்கியதுடன் முகக் கவசங்களையும் வழங்கினர். (படம்:-சுஜீவன்)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப் பழனி முருகன் ஆலயத்தில் கொரோனாப் பெருந் தொற்றிலிருந்து விடுபட வேண்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சண்முகப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூஜையாக வழிபாடுகளும் 108 சங்காபிஷேகமும் இடம்பெற்றன. (படம்:-ரவிசாந்)

## பாலத்தினூடாக பயணிப்போர் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் - கைதடி பாலத்தில் பழுது காணப்படுவதாக முகப்புத்தக பதிவை அடிப்படையாகக் கொண்டு குறித்த பழுது உடனடியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சீர் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் இளைஞர் ஒருவரினால் கைதடி - கோப்பாய் வீதியில் பாலத்தின் தகடுகளில் சற்று விலகல் காணப்படுவதாக பதிவு ஒன்று படத்துடன் இடப்பட்டிருந்தது. அதனை அவதானித்த வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.வலயத்திற்குப் பொறுப்பான நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.இராதாகிருஸ்ணனின் கவனத்திற்கு தொலைபேசி மூலம் கொண்டு வந்தார். இந்நிலையில் குறித்த பாலத்தில் காணப்பட்ட விலகல்கள் உலோக ஒட்டு வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு சீர்செய்யப்பட்டதுடன் பின் பிரதேச சபைக்கும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, பொறியிலாளரினால் தற்போது காணப்படும் பாலம் உலோகத்தினாலானதாகக் காணப்படுவதனால் அப் பாலத்தில் வேகக் கட்டுப்பாடு அவசியம் எனவும் கூடியது 20 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்குமாறு சகலருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் எல்லைகளில் கடல் நீரேரி பாலங்களே உள்ளன. அவற்றுள் யாழ்.-பருத்துத்துறை வீதியில் உள்ள வல்லை பாலம், புத்தூர் - மீசாலை வீதியில் உள்ள பாலம், கோப்பாய் கைதடி வீதியில் உள்ள பாலம் போன்றன உலோக பாலங்களாகவுள்ளன. எனவே பாலங்களுக்கான ஒழுங்கு விதிகளை பின்பற்றி வேகத் தணிப்புடன் வாகனங்கள் செலுத்த கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4)

# 460 பொலிஸாருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் இதுவரை 460 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளான 6 பொலிஸ் அதிகாரிகள் குணமடைந்துள்ளதுடன் 250 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் 355 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஒருங்கிணைப்பு ஊழியர்களுக்கும் கொரோனா உறுதியானது

(கொழும்பு)

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள தொடர்மாடி குடியிருப்பாளர்கள் மற்றும் பொலிஸாருக்குமிடையில் அன்றாட ஒருங்கிணைப்பு கடமைகளில் ஈடுபடவிருந்த 47 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்மாடி குடியிருப்பாளர்களின் தேவைகளை நிறைவேற்றவும், குறித்த குடியிருப்புகளின் அன்றாட கடமைகளுக்காகவும் 400 க்கும் அதிகமான ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இச்சேவையில் இணைத்துக்கொள்வதற்கு முன்னர், அவர்களுக்கு செய்யப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போதே, 47 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-4)

# முடக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு தடை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காலத்தில் வழங்கப்பட்ட அனுமதிகளை பயன்படுத்தி முடக்கல் நிலையிலுள்ள பகுதிகளுக்குள் பயணிக்கவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ முடியாது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முடக்கல் நிலையில் உள்ள பகுதிகளுக்குள் பயணிக்க சிறப்பு அனுமதியைப் பெற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன் வைக்கப்பட வேண்டும். அதன் படி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குச்செல்ல சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடனும் சில நிபந்தனைகள் அடிப்படையிலும்மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# பேருந்து உரிமையாளர்களுக்கு கட்டணத் தள்ளுபடி

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து சேவை உரிமையாளர்களுக்கு பல்வேறு கட்டணத் தள்ளுபடியை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகளை பேருந்து உரிமையாளர்கள் புறக்கணித்துள்ள நிலையில் பின்வரும் நிவாரணங்களை வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அதன்படி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கான கட்டணங்கள், தாமதக் கட்டணங்கள், ஒப்பந்தக் கட்டணங்கள், பதிவுப் புத்தகத்துக்கான கட்டணங்கள், அனுமதிப் பத்திரத்துக்கான ஒப்புதல் கட்டணங்கள், அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு தற்காலிக அனுமதி வழங்கல் கட்டணங்கள் ஆகியவற்றை நீக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ஜ-4)

# இருவர் கைது

புத்தள-ரஹத்தன்கந்த பகுதியில் நீல நிற மாணிக்கம் பதிக்கப்பட்ட புத்தர் சிலை ஒன்றை விற்பனை செய்ய முயற்சித்த 28 வயதுடைய நபரும்பல கும்புர பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)


## காணி விற்பனைக்கு

மல்லாகம் சந்தி K.K.S வீதிக்கும், நீதிமன்ற வீதிக்கும் மிக அண்மையில் கோவைப் புலம் எனும் இடத்தில் 14 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உள்ளது. துண்டுகளாகப் பிரிக்கவும் முடியும். (4602)

தொடர்பு:- 0770871396



Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

STUDENT VISA

பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து

O/L உடன் விண்ணப்பிக்கலாம் Without IELTS

சகல வசதிகளும் செய்து தரப்படும்

VISIT VISA பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

Sponsor Letters Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை


# கொவிட் - 19 சட்டமூலத்தை தயாரிக்கும் நீதி அமைச்சரின் யோசனைக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

கொவிட்-19 (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்திற்கான சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு நேற்று அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்று நிலைமையால் தற்போது நீதிமன்றங்களில் காணப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்ப நீதி வழங்குவதற்காக குறித்த அனைத்து தரப்பினர்கள் மற்றும் ஆட்களுக்கும் சட்ட பாதுகாப்பு வழங்கும் வகையில் குறித்தவொரு நிலையான தற்காலிக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் தேவை உருவாகியுள்ளது.

குறிப்பாக நிலையான காலப்பகுதியில் நடவடிக்கையெடுப்பதற்காக ஏதேனுமொருவருக்கு கொவிட்-19 தொற்று நிலைமையால் குறித்த காலப்பகுதியைத் தவிர்த்து குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்ட ஏற்பாடுகளைத் தயாரித்தல் உகந்ததென அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய அடையாளம் காணப்பட்ட குறித்த விடயங்களை உள்ளடக்கியதாக குறித்த ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக கொவிட்-19 (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்திற்கான சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)


மணிவிழா வாழ்த்துக்கள்



திரு. தணிகாசலம் ராதாகிருஷ்ணமூர்த்தி

இன்று (11.11.2020) அகவை அறுபதை அடையும் யா/நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையின் அதிபர் திரு.தணிகாசலம் ராதாகிருஷ்ணமூர்த்தி அவர்களை சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ அக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

Best Wishes

கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அதிபர்களும் கோப்பாய்க் கல்விக் கோட்டம்.


# போலிக்குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சி

(கொழும்பு)

போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் பலதரப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளது.

கொவிட்-19 வைரஸ் மாதிரிகளை பரிசோதனை செய்யும் இயந்திரத்தை அரசாங்கம் எவ்வித விலை மனுகோரலுமின்றி கொள்வனவு செய்துள்ளதாக எதிர்தரப்பினர் தவறான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்கள்.

கொவிட்-19 வைரஸ் மாதிரிகளை கண்டறியும் சாதனம் ஏதும் கொள்வனவு செய்யவில்லை,அதற்கு விலை மனுகோரலும் விடுக்கப்படவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

போலியான குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டு எதிர்தரப்பினர் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றனர். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை சிறந்த திட்டமிடல் ஊடாக வெற்றி கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (நி-4)


## மீண்டும் கொரோனா அபாயம்

சுயமாகவே உங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு இலகுவான வழி.

ORGANIC HOME GARDEN PROGRAMME

இரசாயன மருந்துகள் கலப்பற்ற வீட்டு மரக்கறித் தோட்டம்

அனைவரும் பங்குபற்றவும்.

நாம் உங்களுக்குத் தேவையான மண், உரம், விசேட உரம், 20 மரங்களும் 50 Bags உட்பட அனைத்தையும் வழங்குகின் றோம்.

அத்துடன் ஒரு மாதம் எமது பாதுகாப்பில் வைத்து வளர்த்து அம்மரங்கள் பூக்கும் தருணத்தில் உங்கள் வீடுகளில் கொண்டுவந்து வழங்குகின்றோம்.

அதன் விலை

ஒரு BAG-300/=

குறைந்தது 20 BAG ஐ பெற்றுக் கொள்ளவேண்டும்.

கத்தரி, தக்காளி, கறிமிளகாய், மிளகாய், பாவற்காய் இன் னும் பல மரக்கறிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 076 769 9191

வறுமை ஒழிப்பு சமூக நல அமைப்பு (Canada)விலும் இலங் கையிலும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்)

குறிப்பு:- பிரதான பாதையின் முகப்பில் அமைந்துள்ள வீட்டு உரிமையாளர்கள் எம்மிடம் பங்காளர்களாக இணைந்து பெரும் வருமானம் பெற்றுக் கொள்ளமுடியும்.




# கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 310 பேர் சுயதனிமைப்படுத்தலில்

## - அரச அதிபர் -

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பாக அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நேற்று ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் தற்போது கிளிநொச்சியில் 310 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளனர்.

ஜெயபுரம் பகுதியில் கொழும்பில் தொழில் புரிந்து வீடு திரும்பிய நிலையில் சுய தனிமைப்படுத்தலுக்குட்பட்ட நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து அவருடன் தொடர்புபட்ட குடும்பங்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை நிறைவடைந்து தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டாலும் தொடர்ந்து 14நாட்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்ட 197 .குடும்பங்களுக்குமான உலருணவுப் பொதிகளை நான்கு பிரதேச செயலகமும் வழங்கி வருகிறன.

இதுவரை மாதாந்த சிகிச்சைக்காக வைத்தியசாலை வரும் நோயாளர்களுக்கு குறிப்பாக முதியவர்களுக்கு தற்போது தபால் மூலம் வீடுகளுக்கு மருந்துகள் அனுப்பி வைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கொரோனா நிலைமை சுகாதார தரப்பினரின் அறிக்கையின் படி ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும் மக்கள் சுகாதார நடைமுறைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார். (5-4-100-316)

# மாங்குளம் பகுதி வயலில் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு பகுதியில் மனித எச்சங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாங்குளம் வீதியின் ஒன்பதாவது கிலோமீற்றர் பகுதியில் கரிப்பட்ட முறிப்பு சந்திக்கு அருகாமையிலுள்ள வயல் காணி துப்புரவு செய்யப்பட்டு நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த காணி பெக்கோ இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்யப்பட்டு மீண்டும் உழவு இயந்திரம் மூலம் உழவு செய்யப்பட்டு நெல் விதைக்கப்பட்டது.

இந் நிலையில் மண்வெட்டி கொண்டு குறித்த வயல் நிலங்களுக்கான வரம்புகளை அமைக்க முற்பட்ட போது வெடி பொருள் இருந்தது அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு கடந்த மூன்றாம் திகதி வெடிபொருட்களை பார்வையிட்ட போது இவ்வாறு மனித எச்சங்கள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் மூன்றாம் திகதி முதல் குறித்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நேற்று நீதிபதி வருகை தந்து குறித்த இடத்தை பார்வையிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-4-281)

# உலர் உணவு வழங்கல்



(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் சுமார் 800 இற்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக வவுனியா பிரதேச செயலகத்தினால் இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# இரு வேறு குற்றச்சாட்டில் இருவர் கைது

(தருமபுரம்)

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அதே பகுதியில் அரச மதுபானத்தை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.(5-4-316)

# வரலாற்று சாதனை படைத்த பாண்டியன்குளம் ம.வி. மாணவர்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் 53 ஆண்டு கால வரலாற்றில் கடந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பொறியியல் துறைக்கு முதற்தடவையாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய போக்குவரத்து வசதிகள் இல்லாத பிரதேசமாக காணப்படுகின்ற மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றி பொறியியல் பீடத்துக்கு முதன்முதலாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 53 ஆண்டுகளை கடந்து செல்லும் ஒரு பாடசாலையாக காணப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த கால யுத்தம் காரணமாக பல தடவைகள் இடம்பெயர்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுத்து இயங்கிய இப்பாடசாலையில் 1993 ஆம் ஆண்டு முதன் முதலாக கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு வணிகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து ஆரம்பிக்கப்பட்ட கணிதப் பிரிவில் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி முதற் தடவையாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை இப் பாடசாலையின் வரலாற்றுப் பதிவாகும்.

அன்றாடம் கூலி செய்து தங்கள் வாழ்வாதாரத்தை நகர்த்தும் இந்த பிரதேசத்தில் உள்ளவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்வியை நகர்ப்புற பாடசாலைகளுடன் போட்டி போட்டு கற்பிக்க முடியாத நிலையில் இப்பாடசாலையில் உயர்தர கணிதப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு முதல் தடவையாக மாணவர்கள் தோற்றி வெற்றி பெற்றிருப்பது என்பது இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் ஒரு படியாக அமைந்துள்ளது.

இப் பாடசாலையிலிருந்து கடந்த வருடத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி சுலக்சனா விக்னேஸ்வரன் (கணிதப்பிரிவு - பொறியியல் துறை), பாலசிங்கம் விதுசன் (கணிதப்பிரிவு -பொறியியல் துறை), தனோஜா யோகராசா (கணிதப்பிரிவு - பௌதீக விஞ்ஞானம்), வினோதரன் விதுஜன் (வர்த்தகப்பிரிவு வணிக விஞ்ஞானம்), ரவீந்திரராசா ஆரோன் (கலைப்பிரிவு - கலைத்துறை), திவ்வியா கணேசராசா (கலைப் பிரிவு - கலைத்துறை), ஜெசிபா பாலேஸ்வரன் (கலைப்பிரிவு - கலைத்துறை), கார்த்திகா ஜோதிலிங்கம் (கலைப்பிரிவு - கலைத் துறை) ஆகிய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# வவுனியாவில் அதிகூடிய மழைவீழ்ச்சி

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்திற்குள் 138.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பு நிலையப் பொறுப்பதிகாரி சதானந்தன் தெரிவித்துள்ளார் .

இவ் வருடம் ஜனவரி தொடக்கம் நவம்பர் பத்து வரையான காலப்பகுதியில் 886.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இருந்தும் இவ்வருடத்தில் நேற்று முன்தினம் பெய்த மழையே அதிகூடிய மழை வீழ்ச்சியாக பதிவாகியுள்ளது.

அதாவது நேற்று முன்தினம் காலை 8.30 மணிமுதல் நேற்றுக் காலை 8.30 மணியரையான 24 மணி நேரத்திற்குள் 138.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இது கடந்த வருடத்தின் மழை வீழ்ச்சியை விடவும் அதிகளவான மழை வீழ்ச்சியாக பதிவாகியுள்ளது.

மழையுடனான கால நிலை நீடிப்பதுடன் மாலை வேளைகளில் பெய்துவரும் மழை தொடர்ச்சியாக இருக்காது எனவும் ஓரிரு நாட்களே மழை தொடர்ச்சியாக பெய்யும்.

இருந்தும் மழையுடன் இடி மின்னல் தாக்கம் அதிகமாக காணப்படும்.

எனவே பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பாளர் தெரிவித்துள்ளார். (5-4-299)

# சஞ்சிகை வெளியீடு

(அக்கராயன்)

செந்தணல் வெளியீட்டகத்தின் படைப்பான கார்த்திகை கலை இலக்கிய மாதாந்த இதழ் வெளியீடானது கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயத்தின் உப அதிபர் ந.தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது. கார்த்திகை மாதாந்த இதழின் வெளியீட்டுரையினை இதழின் பிரதம ஆசிரியரும், செந்தணல் வெளியீட்டகத்தின் இயக்குநருமாகிய வன்னியூர் செந்தூரன் வழங்கினார்.

கார்த்திகை மாத இதழினை கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் வெளியிட்டு வைக்க முத்துஐயன்கட்டு மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா பெற்றுக்கொண்டார். இந் நிகழ்வில் பழம்பெரும் நாட்டுக்கூத்துக் கலைஞரான கணபதிப்பிள்ளை-இராசதுரை செந்தணல் வெளியீட்டகத்தினால் கௌரவிக்கப்பட்டார். (5-4-350)

## இராசிபலன்

11.11.2020
ஐப்பசி 26, புதன்கிழமை
ஏகாதசி முன்னிரவு 8.58 மணிவரை
உத்தரம் பின்னிரவு 1.32 மணிவரை
சுபநேரம் 4.36-6.06 மணிவரை
இராகுகாலம் 12.06-1.36 மணிவரை
சந்திராஷ்டமம்:- அவிட்டம், சதயம்
ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள்.


மிதுனம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், விருந்தினர்கள் வருகையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


கன்னி

ஒரு புதிய அனுபவங்கள் ஏற்படலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.


விருச்சிகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


தனுசு

பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிபீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.


கும்பம்


தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், முயற்சிகள் தாமதமாகும்.


மீனம்

உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

கடவுளைத் தவிர வேறு யாருக்கும் அடிமையாகாதே.

# நீரில் மூழ்கிய வீதிகள்



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் நேற்றுக்காலை வரை தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இதனால் மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

தம்பலகாமம், கந்தளாய், கிண்ணியா, மூதூர் மற்றும் முள்ளிப்பொத்தானை போன்ற பகுதிகளின் தாழ்நிலப் பகுதிகளும் சில சிறு வீதிகளும் மழை நீரில் மூழ்கியுள்ளன.

அதேவேளை மாவட்டத்தில் உள்ள சிறு குளங்களான கந்தளாய், கல்மெட்டியாவ, வான்எல, மணிராசம் மற்றும் பரவிப்பாஞ்சான் போன்ற குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளன. (ஐ)

# அச்சுறுத்தியவர் கைது

(கொழும்பு)

அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பெறுவதற்காகச் சென்ற சந்தர்ப்பத்தில், கிராம உத்தியோகத்தரை அச்சுறுத்திய நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

பிலியந்தலை- நிவுன்கம பிரதேசத்தில், கிராம உத்தியோகத்தர் மேற்படி கொடுப்பனவை வழங்கச் சென்றிருந்தபோது, குறித்த நபருக்கு கொடுப்பனவை வழங்க மறுத்ததால், கிராம உத்தியோகத்தரை அச்சுறுத்தி, அவரது கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஐ-4)

# ஆஸியில் ஈழத்து சிறுமியின் சாதனை



**(மெல்பேர்ன்)**

**அவுஸ்திரேலியாவில் சமையல் வல்லுநர் கிண்ணத்தை ஈழத்துச் சிறுமி ஒருவர் வென்றுள்ளார்.**

"Junior Masterchef Australia 2020" என்ற போட்டியில் கலந்து கொண்ட 11 வயதுடைய ஜோர்ஜியா என்ற சிறுமி பட்டத்தை வென்றுள்ளார்.

இதன் இறுதிப்போட்டி அவுஸ்திரேலிய தொலைக்காட்சியான Network 10 இல் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

ஏனைய போட்டியாளர்களைப் பின்தள்ளிய ஈழத்துச் சிறுமி 25 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் பணப்பரிசை வென்றுள்ளார்.

ஜோர்ஜியா உட்பட இறுதிச்சுற்றில் பங்கு பற்றியவர்களுக்கு இரண்டு பிரதான உணவுகள் தயாரிக்குமாறு கூறப்பட்டிருந்தது.

அதற்கமைய ஜோர்ஜியா இலங்கையின் தேசிய பொருட்களிலான உணவுகள் இரண்டினை தயாரித்திருந்தார். அதற்கு Tropical Mess என பெயரிட்டிருந்தார்.

எனது பாட்டி இலங்கையராகும். அவர் எனக்கு இலங்கை உணவுகள் சமைப்பதற்கு கற்பித்தார். அதற்கமைய நான் வெற்றி பெற்றேன். வென்ற பரிசுத் தொகையில் உணவு தொடர்பான விடயங்களுக்குப் பயன்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

இரத்தினபுரி, குருவிட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வேகமாகப் பயணித்த வான் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து பலசரக்குக் கடையொன்றில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் பெண் ஒருவரும், கடையின் உரிமையாளரும் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-4)

# சுகாதார அமைச்சின் அனுமதி வேண்டும்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்காக கடும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து ஊழியர்களை கடமைக்கு அழைப்பதற்கு சுகாதார அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று ஒழிப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பல பிரதேசங்களில் கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்காக அவசியம் தேவையான ஊழியர்களை அழைக்க முடியாமை பிரச்சினையாக அமைந்துள்ளது.

இந்நிலையில் இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக நாட்டின் ஏதேனும் பிரதேசங்களில் இருந்து அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் ஊழியர்களை அழைப்பது அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் அது தொடர்பான தகவல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# ஜோ பிடனின் வெற்றி குறித்து மௌனம் கலைத்தது சீனா

(வோஷிங்டன்)

அமெரிக்கத் தேர்தல் முடிவுகள், அமெரிக்க சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும் என சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு இந்தியா, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

எனினும் சீனா, ரஷ்யா, மெக்சிக்கோ போன்ற சில நாடுகள் வாழ்த்துத் தெரிவிக்காததுடன், எந்தக் கருத்தும் கூறவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ், அமெரிக்க-சீன உறவு மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. இருப்பினும் ட்ரம்பின் தோல்விக்கு மகிழ்ச்சி அடையும் விதத்தில்கூட சீனா எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், ஜோ பிடனுக்கு சீனா வாழ்த்துத் தெரிவிக்காதது ஏன்? என சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின்னிடம் ஊடகங்கள் கேள்வியெழுப்பின.

இதற்குப் பதிலளித்த அவர், தேர்தலில், தான் வெற்றி பெற்றதாக ஜோ பிடன் அறிவித்துக் கொண்டதை கவனித்ததாகவும் ஆனால், இந்த தேர்தல் முடிவுகள், அமெரிக்க சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும் என தாம் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் இதன்போது சீனா எப்போது அறிக்கை வெளியிடும்? அல்லது ட்ரம்பின் நிலைப்பாட்டை அறிய காத்திருக்குமா? என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், நாங்கள் சர்வதேச நடைமுறைகளை பின்பற்றுவோம் என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# பதவியில் இருக்கும்போது தோல்வி கண்டவர் பட்டியலில் இணைந்தார் டொனால்ட் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாவதற்காக தேர்தலில் போட்டியிட்டு டொனால்ட் ட்ரம்ப் கண்டிருக்கும் தோல்வி, அமெரிக்காவின் சரித்திரத்தில் பதவியில் இருக்கும்போது தோற்கடிக்கப்பட்ட 11 ஆவது ஜனாதிபதியாக அவரை பட்டியலில் சேர்த்திருக்கிறது.

இரண்டாவது பதவிக்காலத்திற்குப் போட்டியிட்டு தோல்வி கண்ட பத்தாவது ஜனாதிபதியும் அவரே.

றிச்சர்ட் நிக்சன் பதவி விலகியபோது துணை ஜனாதிபதியாக இருந்த ஜெரால்ட் போர்ட் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஆனால் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஜிம்மி கார்ட்டரிடம் போர்ட் தோல்வி கண்டார்.

இரண்டாவது பதவிக்காலத்திற்கு தெரிவாவதற்காகப் போட்டியிட்டு இறுதியாகத் தோல்வி கண்டவர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் (1992).

இரண்டாவது பதவிக்காலத்திற்குத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்ட குரோவர் கிளீவ்லாண்டின் பின்னர் 4 வருடங்கள் கழித்து ஜனாதிபதி பென்சமின் ஹறிசனை தோற்கடித்து மீண்டும் வெள்ளை மாளிகைக்கு வந்தார்.

தொடர்ச்சியாக இரு பதவிக் காலங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்தவர் கிளீவ்லாண்ட் மாத்திரமே என்று சி.என்.என் கணித்திருக்கிறது. (நி)

# உலகையே திரும்பிப் பார்க்க வைத்த தடுப்பூசியின் பின்னால் இருக்கும் தம்பதியர்



(வோஷிங்டன்)

கொரோனா தடுப்பூசியைக் கண்டுபிடித்து விட்டதாகவும் அது 90 சதவிகிதம் செயற்றிறன் உடையதாக இருப்பதாகவும் வெளியான ஒரு செய்தி உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

அந்த தடுப்பூசியை கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க நிறுவனமான **Pfizer** நிறுவனத்தின் பெயர் செய்திகளில் பரபரப்பாக அடிபட்டாலும், அது அமெரிக்க நிறுவனம் மட்டுமே கண்டுபிடித்த தடுப்பூசி அல்ல.

அமெரிக்க நிறுவனமான **Pfizer** மற்றும் ஜேர்மன் நிறுவனமான **BioNTech** இரண்டும் இணைந்துதான் அந்த தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளன.

**BioNTech** நிறுவனத்தில் கொரோனா தடுப்பூசி தயாரிப்பின் பின்னணியில் இருப்பது ஒரு தம்பதியர்.

மருத்துவர்களான **Ugur Sahin (55)**மற்றும் **Oezlem Tuereci (53)**என்ற அந்த தம்பதியர், மருத்துவ ஆராய்ச்சியின் மேல் தீராத காதல் கொண்ட ஒரு தம்பதியர்.

அவர்களை ஆச்சரிய தம்பதி என குறிப்பிட்டுள்ளதற்கு பல காரணங்களைச் சொல்லலாம். முதலாவதாக, தங்கள் திருமண நாளில் கூட, ஆய்வகத்துக்கு வந்து பணி செய்ய அவர்கள் இருவரும் தயங்கவில்லையாம்.

இரண்டாவதாக, எளிய பின்னணியிலிருந்து வந்தவரான **Sahin**, இன்னமும் தன் கடந்த கால வாழ்க்கையை மறக்காமல் எளிமையாக தனது சைக்கிளிலேயே சில நேரங்களில் அலுவலகத்திற்கு வந்து விடுவதுண்டாம்.

பல மில்லியன் மதிப்புடைய இரண்டு நிறுவனங்களுக்கு சொந்தக்காரரான ஒருவர், சாதாரணமாக ஜீன்ஸ் அணிந்து சைக்கிளில் பணிக்கு வருவதை எங்காவது கற்பனை செய்து பார்க்க முடியுமா? அத்துடன், இன்று என்னுடைய நிறுவனத்தில் பங்கு என்ன விலைக்கு போகிறது என்று கூட அவர் பார்ப்பதில்லையாம், அதைவிட, அறிவியல் பூர்வமான ஆய்வுகள் குறித்து படிப்பதில்தான் ஆர்வம் காட்டுவாராம் **Sahin.**

குறித்த தம்பதியர் துருக்கியை பின்னணியாக கொண்டவர்கள், இன்னமும் தம்பதியர் புற்றுநோய், காசநோய் ஆய்வுகளில் கவனம் செலுத்திவரும் நிலையில், ஜேர்மனியின் முதல் 100 செல்வந்தர்களில் ஒருவரான **Sahin** எளிமையை மறக்கவில்லை என்பது ஆச்சரியமான செய்திதானே! (நி)

# அசர்பைஜானிடம் சரணடைந்த ஆர்மீனியா முடிவுக்கு வந்த போர்



(பகு)

ஆர்மீனிய ஆதரவு படையினரிடம் இருந்த நகோர்னோ-கராபத் மாகாணத்தின் முக்கிய நகரங்களை அசர்பைஜான் படையினர் கைப்பற்றினர்.

அசர்பைஜானுக்கு துருக்கி தனது நேரடி ஆதரவை அளித்தது. ஆர்மீனியாவுக்கு ஆயுத ரீதியில் ரஷ்யா ஆதரவு அளித்த போதும் நேரடியாக களத்தில் இறங்கவில்லை. இந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வர மூன்று முறை அமைதி ஒப்பந்தம் போடப்பட்டது.

ஆனால், தொடர்ச்சியான மோதல்களால் அமைதி ஒப்பந்தங்கள் தோல்வியில் முடிந்தன. இதையடுத்து, அசர்பைஜான் - ஆர்மீனியா இடையே கடந்த சில நாட்களாக கடுமையான மோதல் நிலவி வந்தது.

இதற்கிடையில், நகோர்னோ-கராபத் மாகாணத்தில் உள்ள முக்கிய மற்றும் இரண்டாவது மிகப்பெரிய நகரமான சுஷா என்ற நகரை அசர்பைஜான் படைகள் கைப்பற்றின.

இதையடுத்து 6 வாரங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த போர் இறுதிக் கட்டத்தை எட்டியது. நகோர்னோ-கராபத் மாகாணத்தின் முக்கிய நகரை கைப்பற்றியதையடுத்து, போரில் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக அசர்பைஜான் அறிவித்தது.

இந்நிலையில், ஆர்மீனியா-அசர்பைஜான் இடையே ரஷ்யா முன்னிலையில் நேற்று போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. ரஷ்ய ஜனாதிபதி புடின் தலைமையில் காணொளி காட்சி மூலம் நடந்த இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்பும்உடனடியாகசண்டையை நிறுத்த ஒப்புக்கொண்டன.

மேலும், தாங்கள் கைப்பற்றிய நகோர்னோ-கராபத் மாகாணத்தின் முக்கிய பகுதிகளை அசர்பைஜான் தங்கள் வசமே வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதன்மூலம் பல வாரங்களாக நடந்த போரில் ஆர்மீனியா தோல்வியடைந்து அசர்பைஜான் வெற்றிபெற்றதாகவே தெரியவந்துள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் மோதல் ஏற்படாமல் இருக்க ரஷ்யா படைகள் நகோர்னோ-கராபத் மாகாணத்தில் இருநாட்டு எல்லைகளைப் பிரிக்கும் பகுதிகளில் குவிக்கப்படுகிறது.

இந்த அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட சில மணி நேரங்களில் ரஷ்யபடைகள்அமைதியைநிலை நிறுத்தும் வகையில் நகோர்னோ-கராபத் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, 1,000 இற்கும் அதிகமான உயிரிழப்புகளை ஏற்படுத்தி பல வாரங்களாக நடைபெற்று வந்த ஆர்மீனியா-அசர்பைஜான் போர் முடிவுக்கு வந்துள்ளது. (நி)

# பக்க விளைவுகள் எதுவுமற்ற கொரோனா தடுப்பூசி தயார்




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஃபைசர் மருந்து நிறுவனமும் ஜேர்மனியின் பயோஎன்டெக் மருந்து நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ள கொரோனா தடுப்பூசியின் இறுதிக்கட்ட ஆய்வு முடிவுகளின் முதல் பகுதி நேற்று முன் தினம் வெளியானது.

இதன்படி, இந்தத் தடுப்பூசி 90 சதவீதம் கொரோனா வைரஸ் பாதிப்பை தடுக்கிறது என ஃபைசர் நிறுவனம் அறிவித்துள்ளது.

தடுப்பூசி குறித்த புதிய அறிவிப்பு வெளியான சில நிமிடங்களில் பங்குச் சந்தையில் அந்நிறுவனத்தின் பங்குகளின் மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது.

இந்தத் தடுப்பூசியில் மிகப் பெரிய அளவில் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதற்கு டொனால்ட் ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ள அவர், தடுப்பூசி மிக விரைவில் வந்துகொண்டிருக்கிறது எனவும் தடுப்பூசி 90 சதவீதம் பலனளிக்கிறது என்பது மிகவும் நல்ல செய்தி என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவிக்கப்பட்டு இரண்டு நாட்கள் கடந்த நிலையில் கொரோனா தடுப்பு மருந்து குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கர்ப்பிணி பொலிஸ் உத்தியோகத்தர்கள்

# முன்னறிவிப்பின்றி வீட்டில் தங்க அனுமதி

**(கொழும்பு)**

**கர்ப்பமாக உள்ள அல்லது 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னறிவிப்பு இன்றி வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்க பதில் பொலிஸ்மா அதிபர் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**



இது தொடர்பாக பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு சிறப்பு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்கு மாகாணத்தில் வசிக்கும் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுடன் உள்ள பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கர்ப்பிணி பொலிஸ் உத்தியோகத்தர்கள் எந்தப் பொலிஸ் நிலையம் அல்லது அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருந்தாலும் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் வசித்தாலும் மேற்படி நடைமுறையைப் பின்பற்றலாம்.

அவர்கள் கடமைக்காக பொலிஸ் நிலையத்தில் முன்னறிவிப்பு செய்யத் தேவையில்லை. அவர்கள் வீட்டிலேயே தங்கலாம்.

எனினும், அவர்களின் சம்பளத்தை ஸ்தாபன குறியீட்டின் விதிகளின்படி செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று மேற்கு மாகாணத்திலும் தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளிலும் தீவிரமாக பரவி வருகிறது.

அவர்கள் நோய்த்தொற்றுக்கு ஆளானால், குறிப்பாக கர்ப்ப காலத்தில் மற்றும் சிறு குழந்தைகளுடன் இருந்தால் பெரும் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# வெளிநாட்டுத் தூதுவர்களாக சேவையாற்ற ஏழு புதிய தூதுவர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

வெளிநாட்டுத் தூதுவர்களாகச் சேவையாற்ற இலங்கை அரசாங்கத்தினால் பெயரிடப்பட்ட ஏழு புதிய தூதுவர்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பாராளுமன்ற குழு அறையில் உயர் பதவிகள் பற்றிய குழு நேற்று முன்தினம் கூடியது.

இதன்போதே ஏழு புதிய தூதுவர்களுக்கு அனுமதிவழங்கியுள்ளது.

இதற்கமைய, அஹமட். ஏ.ஜவாட் சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும், அருனி ரணராஜா நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், தர்ஷன பெரேரா சுவீடனுக்கான இலங்கைத் தூதுவராகவும், எம்.கே.பத்மநாதன் எகிப்துக்கான இலங்கைத் தூதுவராகவும் நியமிப்பதற்கான அனுமதி இதன்போது வழங்கப்பட்டது.

மேலும், எஸ்.டி.கே.சேமசிங்ஹ போலந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், சி.ஈ.சமிந்த.ஐ.கொலன்னே தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் கனடாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராகவும் நியமிப்பதற்கான அனுமதியும் இதன்போது வழங்கப்பட்டது.

சமல் ராஜபக்ஷ, நிமால் சிறிபால டி. சில்வா, தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல, ரமேஷ் பத்திரன, சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, விதுர விக்கிரமநாயக்க, அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (நி-4)

# பி.சி.ஆர். பரிசோதனை மீனவர்களுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

காலியிலுள்ள மீன்பிடித் தொழிலை மேற்கொள்பவர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை அவசியம் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தொற்று நோயியல் நிபுணரும் வைத்தியருமான சிங்காராச்சி மேலும் கூறியுள்ளதாவது, "காலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் குறைந்தபட்சம், ஒரு பி.சி.ஆர். சோதனைக்காவது உட்படுத்தப்பட வேண்டும்.

மேலும், குறித்த மீனவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும் சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத மீனவர்கள், மீன்பிடித் துறை முகங்களுக்குள் நுழைவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பி.சி.ஆர்.சோதனைகளை நடத்துவதில் மீன்பிடி சமூகத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்ட போதிலும், சிலர் நிலைமையை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

எதிர்காலத்தில், மீனவர்களின் தகவல்களை மீனவர் சங்கங்கள் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்களிடமிருந்து பெறவும், பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத மீனவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# புதிய விமானப்படை தளபதி பிரதமர் சந்திப்பு



(கொழும்பு)

புதிய விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

18ஆவது விமானப்படை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரன, முப்பது ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான மனிதாபிமான நடவடிக்கைக்கு போர் படைகளை இயக்குவதில் அவர் முக்கிய பங்களிப்பு செய்தார்.

1990ஆம் ஆண்டு சுப்பர் சொனிக் எஃப்-7 மற்றும் 1995 ஆம் ஆண்டு கிபீர் ஜெட் விமானத்தை இலங்கைக்கு கொண்டு வந்த விமானியும், கிபீர் விமான படைப்பிரிவின் கட்டளை அதிகாரியுமான சுதர்ஷன பத்திரன, பிரிவினைவாத பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்புக்காக வீர விக்ரம விபூஷண பதக்கத்தையும் மற்றும் ரண விக்ரம பதக்கத்தையும் தலா இரண்டு முறைகளும், ரண ஷூர பதக்கத்தை நான்கு முறையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, கண்டி தர்மராஜ கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர் ஆவார். (நி-4)

# கடன்பெற வர்த்தக வங்கி ஊடாக விண்ணப்பிக்கலாம் - மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக, பாதிப்பை எதிர்நோக்கியுள்ள வர்த்தகர்கள் உள்ளிட்டவர்களுக்கு 6 மாதத்துக்கான கடன் நிவாரணத்தை வழங்கவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எனவே இந்தக் கடன் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் இந்த மாதம் 30ஆம் திகதி வரை 'விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவித்துள்ளது.

மத்திய வங்கியால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள 2020 இலக்கம் 10 என்ற சுற்று நிருபத்துக்கு அமைய, 2020 ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து 2021 மார்ச் 31ஆம் திகதி வரை இந்த புதிய கடன் நிவாரணம் செயற்படுத்தப்படும் என்றார்.

அதற்கமைய, கொரோனாத் தொற்றால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள சுற்றுலா, ஏற்றுமதி, ஆடை, தகவல் தொழில்நுட்பம், தேயிலை உள்ளிட்ட பல்வேறு துறையினரும் குறித்த துறைகளில் கடமை புரிபவர்களும் இந்த நிவாரண கடனுக்காக வர்த்தக வங்கி ஊடாக விண்ணப்பிக்கலாம் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கும் மூலிகைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தமிழ் மருத்துவ முறைகளில் கற்ப மருந்துகள் தலையாயன. இவைகள் சித்தர்களால் கண்டு தரப்பெற்றவை. கற்பமென்பது உடம்பினை நோயுறாதபடி நன்னிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணிகளையும் நீக்குவதென்பர். உடம்பினுடைய மேன்மையை முழுவதுமாக உணர்ந்தவர் சித்தர்.

சித்த முறையில் உடலில் நன்மையை காப்பது "காய கற்பம்" எனப்படும். இக் கற்பம் உடம்பைக் கல்லைப் போலாக்கும்.

"கற்பத்தை யுண்டால்
காயம் அழியாது
கற்பத்தி னாலே
காணலாம் கைலையை
கற்பத்தி னாலே
காணலாம் சோதியை
கற்பத்தி னாலே
காலையுற் கட்டிடே"

கற்ப வகை கூறுங்கால் அது பொதுக்கற்பம், சிறப்பு கற்பம் என வகைப்படும். இவ்வாறான பொது சிறப்பென விரிந்த கற்பத்துள் மூலிகைக் கற்பங்களும் அடங்கும்.

இக் கற்ப மூலிகைகளை தனியாகவாவது, பிற மூலிகைப் பொருட்களும் கலந்தாவது மூலிகைக் கற்பங்களாக பயன்படுத்தி வர நோய் எதிர்ப்பாற்றலும் அதிகரித்து நோய்கள் அணுகாமலும் தடுக்கக்கூடியதாக இருக்கும்.

மூலிகைகளை கற்ப முறைப்படி உண்ணத் தொடங்கியபின் இடையீடின்றி ஒரு நாளும் விடாமல் தொடர்ந்து ஒரு மண்டலமாகிய 48 நாட்களாவது புசிக்க வேண்டும். அநேகமான கற்பங்களுக்கு மிளகு, சிறிதளவு உப்பு சேர்க்கப்படும். அநேகமாக பழப்புளி நீக்கப்பட வேண்டும்.

பொதுவாக நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கும் கற்ப மூலிகைகளாக:

இஞ்சி, கருநெல்லி, கருந்துளசி, எலுமிச்சை, வேம்பு, குளத்து பொன்னாங்காணி, கற்றாழை, கையான்தகரை, கீழ்காய்நெல்லி, சீந்தில், கோரைக்கிழங்கு, உள்ளி, பேரிச்சம்பழம், தூதுவளை, சின்னச்சீரகம், வில்வம், தாமரை, நன்னாரி, அமுக்கிராகிழங்கு, அறக்கீரை, குப்பைமேனி, புளியாரை, சீதேவியார் செங்கழுநீர், கரைக்காய், கடுக்காய் போன்ற மூலிகைகளை கற்ப முறைப்படி எடுக்கலாம்.

### 1.இஞ்சி

இஞ்சித்தேனூறல்

இஞ்சியை தோல் சீவி கீற்றுக்களாக வெட்டி தூய தேனில் ஊறவைத்து ஒரு தேக்கரண்டி வீதம் 48 நாட்கள் தொடர்ச்சியாக எடுத்து வர தேக பலம் அதிகரிக்கும்.

### 2.உள்ளி

உள்ளியை தோல்நீக்கி கீற்றுக்களாக வெட்டி 250 கிராமிற்கு 750 மில்லி தூய தேனில் ஊறவைத்து (2 கிழமைகளின் பின்) 1 தேக்கரண்டி அளவு தினமும் தொடர்ந்து 48 நாட்கள் எடுத்துவர நோய் எதிர்பாற்றலை எதிர்க்கும்.

### 3. குளத்து பொன்னாங்காணி

பொதுவாக குளக்கரைகளில் இப் பொன்னாங்காணி செழிப்பாக வளரும். இக் குளத்து பொண்ணாங்காணி இலைகளை சேகரித்து நெய்யில் வதக்கி மிளகு, உப்பு முதலியன சேர்த்து புளிநீக்கி உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வர தேக பலமும் நோய் எதிர்பாற்றலும் அதிகரிக்கும்.

சாதாரண பொன்னாங்காணியை விட குளத்து பொன்னாங்காணியில் உயிர்ச்சத்து 'A' அதிகளவில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கற்றாழை சோற்றை அல்லது கற்றாழை பூக்களை ஊறுகாயாவது வற்றலாவது செய்து சாப்பிட்டு வர கற்பமாக அமையும். கற்றாழையை சட்னி ஆக தயாரித்தும் எடுக்கலாம்.

### கற்றாழை சட்னி

கற்றாழைச் சோற்றை எடுத்து சிறிய துண்டுகளாக்கி 7 தடவை நீரில் நன்கு கழுவி எடுத்தல். நல்லெண்ணெய் விட்டு சூடாக்கியதும் செத்தல் மிளகாய், கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, கொத்தமல்லி, சின்னவெங்காயம், இஞ்சி, நெல்லிக்காய் நறுக்கியது, கற்றாழைச் சோறு, தேங்காய்ப்பூ என்பவற்றை நன்கு வதக்கி எடுத்து இவற்றை அம்மியில் அரைத்து சிறிது உப்பு சேர்த்து நன்கு அரைத்து சட்னி பதத்தில் எடுக்க வேண்டும்.


வாணலியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு சூடாக்கி கடுகு இட்டு பொரித்ததும் சட்னியை போட்டு நன்கு கிளறி எடுத்து சாதத்துடன் சாப்பிட்டு வர மலச்சிக்கலும் நீங்கி தேக பலத்தையும் கொடுத்து உடம்பை திடகாத்திரமாக பேணவும் உதவும்.

### தாமரை

தாமரை விதைகள் உடலிற்கு பலத்தையும், போசணையையும் கொடுக்கக்கூடியது. தாமரை விதைகளை பொடித்து 1-2 கிராம் அளவு உள்ளுக்கு கொடுத்துவர உடலிற்கு வன்மையை கொடுக்கும்.

### தாமரை விதை

வாணலியில் நல்லெண்ணெய் விட்டு சூடானதும் கறுவாப்பட்டை, இலவங்க பத்திரி, பெருஞ்சீரகம், கடுகு, நறுக்கிய சின்ன வெங்காயம், இஞ்சி, பூண்டு அரைத்த விழுது, சேர்த்து தாளித்து தக்காளியை நன்கு அரைத்து அதனுடன் மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், மசாலாத்தூள், தாமரை விதைகளை வெட்டி சேர்த்து வதக்கி, சிறிது நீர்விட்டு கொதிக்க விடல் வேண்டும், அத்துடன் உப்பு சேர்த்து, கசகசா, பெருஞ்சீரகம், மஞ்சள், சீரகம் இவற்றை நன்கு அரைத்து கிரேவியுடன் சேர்க்க வேண்டும், இருதயத்திற்கு பலத்தைக் கொடுக்கக்கூடியது.




### வேம்பு

முதிர்ந்த வேம்பின் வேப்பந்துளிர், முதிர்ந்த இலைகளை இடித்து இதற்கு அரைப்பதற்கு ஓமம், உப்பு சேர்த்து பொடித்து பக்குவப்படுத்தி 2 கிராம் அளவு எடுத்து வந்தாலும் உடம்பில் நோய்களை ஒட்டவிடாது.

### கையான்தகரை

கையான்தகரை முழுச் செடியையும் நிழலில் உலர்த்தி பொடித்து தினமும் 2 கிராம் அளவு இளநீரில் ஒரு மாதமும், தேனில் ஒரு மாதமும் உட்கொள்ள இரத்தத்தை விருத்தி செய்து நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கச் செய்யும்.

### கீழ்க்காய்நெல்லி

கீழ்க்காய் நெல்லி முழுச் செடியையும் சேகரித்து அரைத்து 5 கிராம் அளவு பசுந்தயிரில் கலந்து தினமும் 48 நாட்கள் எடுத்துவர தேகபலம் அதிகரித்து இரத்த விருத்திகளையும் உண்டாக்கும்.

### பேரிச்சம்பழம்

விதைகள் நீக்கிய பேரிச்சம் பழத்தை தேனில் ஊறவைத்து, தினமும் 3 தேனில் ஊறிய பழங்களை 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தாலும் நோய் எதிர்பாற்றலை அதிகரிக்கும்.

### சின்னச்சீரகம்

சின்னச்சீரகத்தை நன்கு கழுவி உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொண்டு தினமும் 2 கிராம் அளவு அதேயளவு பனைவெல்லம் சேர்த்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வர வேண்டும். இதனால் தேகம் கட்டுப்பட்டு பலமும் உண்டாகும்.

### கருந்துளசி

கருந்துளசிச் சாறு 15 மில்லி, இஞ்சிச்சாறு 15 மில்லி கலந்து தினமும் காலையில் எடுத்து வந்தாலும் உடல் உஷ்ணம் தணிந்து நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கும்.

### தூதுவளை

தூதுவளங் காயை கறி, வற்றல், ஊறுகாய் ஆகவும் இலையை கீரையாகவும் சமைத்து நெய் கூட்டி ஒரு மண்டலம் (48 நாட்கள்) கற்பமாக சாப்பிட்டு வர சுவாசாசயம் பலப்படுவதோடு தேக பலத்தையும் மேம்படுத் தும்.

### அறக்கீரை

அறக்கீரையானது முளைக்கீரையை விட இரும்புச்சத்து அதிகமாகவுள்ளது. சித்த மருத்துவத்தில் பத்தியத்திற்கு உகந்ததும் அறக்கீரையே. அறக்கீரையை துவையலாக செய்து அதாவது மிளகு, சீரகம், உப்பு அளவுப்படி சேர்த்து உணவுடன் சேர்த்து சாப்பிட வேண்டும்.

### சிறு நன்னாரி

நன்னாரியின் பாவனை மக்களிடையே இருந்தாலும் கற்பமுறையாக அதாவது நோய்கள் உடம்பை அணுகாவண்ணம் இருக்க சிறு நன்னாரி இலையையும் வேரையும் சிறு சிறு துண்டுகளாக்கி நன்கு கழுவி நெய்யில் வதக்கி வறுத்து துவையல் அல்லது வடகமாகச் செய்து சிறு புளி, மிளகு, உப்பு சேர்த்து கடுகு நீக்கி ஒரு மண்டலம் சாப்பிட்டு வர இரத்தம் சுத்தியாகி இரத்த ஓட்டம் சீராகி தேகப் பலமும் அதிகரிக்கும்.

### வில்வம்

வில்வம் காய், கனி, வேர் ஆகியவற்றிற்கு கற்ப குணங்கள் உண்டு. வில்வங்காயை உணவுக்கூறாக அதாவது வில்வங்காயில் பாற்கறி துவையல் செய்து பயன்படுத்தலாம். வில்வம் வேரை குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு தினமும் ஒரு மண்டலம் எடுத்து வர வேண்டும். இது நரம்புகளை பலப்படுததி உடலைத் திடமாக வைத்திருக்க உதவும்.

### எலுமிச்சை

எலுமிச்சம் பழச்சாறு தினமும் உப்பு சேர்த்து எடுக்கலாம். எலுமிச்சம்பழச்சாறு 15 மில்லி தூயதேன் 15 மில்லியும் கலந்து தினமும் எடுக்கலாம். அல்லது எலுமிச்சம் பழத்தை ஊறுகாயாகச் செய்தும் பயன்படுத்தலாம். கற்பமாக எலுமிச்சம் பழத்தை எடுக்கும் போது விதை முற்றாத பழங்களாக தேர்வு செய்ய வேண்டும்.

### கரு நெல்லி

நெல்லிக்காயை விதை நீக்கி தினமும் தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிடலாம். அல்லது நெல்லிக்கனியை வற்றல், ஊறுகாயாகவாவது எடுக்கலாம். நெல்லிக்காயை துவையல் அல்லது பானமாகவோ, குடிநீராகவோ தயாரித்தும் பருகலாம்.

சாதாரணமாக எமக்கு கிடைக்கும் பெருநெல்லியை விட வடமாகாண காட்டுப் பிரதேசங்களில் வளரும் காட்டு நெல்லி அல்லது கரு நெல்லியானது கற்பத்திற்கு சிறந்தாகும். ஆனால் காய்கள் சிறிதாகவும் கரும்பச்சையாகவும் இருக்கும்.

# மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

**மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் மாவட்டம் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்க வேண்டும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**



வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் குறித்து விளக்கமளிக்கையிலேயே அதன் தலைவர் உபுல் ரோஹன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைகள் உள்ளிட்ட முக்கிய இடங்களை திறப்பதற்கு பொருத்தமான எவ்வித சூழலும் இன்னும் உருவாகவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே போன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அல்லது அலுவலகங்கள் திறக்கப்பட்டாலும் இயன்றளவு ஊழியர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட் கட்டுப்பாட்டுக்காக வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா? என்பது குறித்து கண்காணிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தொடர்பிலும் வரையறைகள் விதிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கொத்தணிகளாக தொற்றாளர்கள் இனங்காணப்படும் எண்ணிக்கை குறைவடைந்தாலும் நாடளாவிய ரீதியில் உருவாகிய கிளைக் கொத்தணிகளில் தினமும் குறிப்பிட்டளவு தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

எனவே சகல மாவட்டங்களிலுமுள்ள பொது மக்கள் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-4)

# வீட்டில் உயிரிழக்கும் கொரோனா நோயாளிகளால் ஆபத்து என எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா தொற்று ஆரம்பத்தை கண்டுபிடிக்க முடியாத பலர் சமூகத்திற்குள் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் உயிரிழந்த பின் கண்டுபிடிக்கப்படுகின்றனர். உயிரிழந்த பின் கண்டுபிடிக்கப்படுவர்களுக்கு எவ்வாறு கொரோனா தொற்றியதென்பது கண்டுபிடிப்பது மிகவும் சிரமமாக உள்ளதென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக இது வரையில் அடையாளம் காண முடியாமல் நோயாளிகள் பலர் தொடர்ந்தும் வீட்டில் உள்ளமை உறுதியாகியுள்ளது.

கொரோனா இது வரையில் சமூகமயமாகியுள்ளதா? இல்லையா? என்பது தற்போது விவாத பொருளாகியுள்ளது. எனினும் சமூகமயமாகவில்லை என்பதே நிபுணர்களின் கருத்தாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# கொரோனா சோதனை வழிமுறையை விரைவில் புதுப்பிக்க வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம்

(கொழும்பு)

தற்போதைய கொரோனா சோதனை வழிமுறையை சுகாதார அமைச்சகம் விரைவில் புதுப்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் ஆசிரியர் ஹரித்த அலுத்கே இதனை தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பேசிய அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இந்த விடயத்தில் நிபுணர்கள் தமது கவனத்தை செலுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் அரசாங்கம், தனிமைப் படுத்தப்படுதல் நடைமுறை தொடர்பான கொள்கையை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், தற்போது வீடுகளில் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களை பி.சி.ஆர்.சோதனைகளை மேற்கொள்ளாமல் விடுவிக்க வேண்டாம் என்றும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும், பி.சி.ஆர் மற்றும் ரேபிட் என்டிஜென் கண்டறிதல் சோதனை என்பவற்றுக்கு இணங்க விரைவான பிறப்பொருள் எதிரி சோதனையின் நம்பகத்தன்மை பயன்படுத்துவது குறித்து சுகாதார அமைச்சகம் ஆராய வேண்டும் என்று வைத்திய கலாநிதி ஹரித்த அலுத்கே கோரிக்கை விடுத்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அரசனும் துறவியும்

ஒரு ஊரில் ஒரு துறவி இருந்தார்.புத்த சமயத் துறவி.அந்த ஊர் மன்னன் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டான்.ஒரு நாள் புறப்பட்டுப் சென்று துறவியின் பாதங்களைத் தொட்டு வணங்கி பின் சொன்னான்.

ஐயா...நான் உங்களை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போவதற்காக வந்திருக்கின்றேன்.இனிமேல் நீங்கள் இங்கே எதற்கு இருக்க வேண்டும் என்றான்.அவன் மனதுக்குள் என்ன நினைப்பு என்றால்,

இவர் எங்கே வரப்போகின்றார். நான் மிகவும் எளிமையானவர்...எனக்கு எதற்கு அரண்மனை வாசம்? என்று சொல்லிவிடுவார்..என்று நினைத்தார். ஆனால் அந்தத் துறவி என்ன செய்தார் தெரியுமா?அப்படியா.. சரி..போகலாம்... போய் உன் ரதத்தைக் கொண்டுவா அரண் மனைக்குப் போகும் போது அதற்குத் தகுந்த மாதிரி ஆடம்பரமாக போக வேண்டும் என்றுவிட்டார்.

துறவி இப்படிச் சொன்னதும் அந்த மன்னனுக்கு மனதுக்குள்ளே சந்தேகம் வந்துவிட்டது.இவர் உண்மையில் துறவிதானா? ஏமாற்றுப் பேர்வழி மாதிரி தெரியுதே என்று நினைத்தான்.இருந்தாலும் இனிமேல் என்ன செய் வது? ரதத்தைக் கொண்டு வந்தான். துறவி ஏறி உட்கார்ந்தார். பக்கத்திலே ராஜா..அவர் மிகவும் உற்சாகமாக வருகின்றார்.இவன் மிகவும் சோர்ந்து போய் வருகின்றார்.துறவி மரத்தடியில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்.. அரண் மனையிலே எளிமையாக ஒரு இடத்திலே உட்கார்ந்து கொள்வார் என்று நினைத்தார்.ஆனால் அப்படி இல்லை.

அரண்மனைக்கு வந்த உடனே அந்தத் துறவி...அதைக் கொண்டு வா... இதைக் கொண்டுவா என்றார்.அரண்மனையில் இருந்தால் அரசனைப் போல இருக்க வேண்டுமாம்.இரவு முழுவதும் சௌகரியமாகத் தூங்கினார். பகலிலே அரண் மனைத் தோட்டத்திலே உலாவ வேண்டியது. நீச்சல் குளத்திலே குளிக்க வேண்டியது..இப்படியே பொழுதைப் போக்கினார்.அந்த அரண்மனையில் துறவி மகிழ்ச்சியாக இருக்கின்றார். மன்னனால் அப்படி இருக்க முடியவில்லை.அவருக்கு எந்தக் கவலையும் இல்லை..இவனுக்கு அரசாங்கக் கவலைகள். துறவி அப்படி இருக்கிறதை இவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.ஒரு நாள் அவரிடம் போய்..நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும் என்றான். துறவி பார்த்தார்.

நான் இந்த அரண்மனைக்கு வரும்போதே நீ என்னமோ என்னிடம் கேட்க வேண்டும் என்று நினைத்தாய் ஏன் காலதாமதம்? நீ அநாவசியமாக உன்னையே தொந்தரவு செய்து கொண்டிருக்கின்றாய் நீ கவலையாக இருக்கின்றாய் என்கின்றது எனக்குப் புரிகின்றது.நான் மரத்தடியில் இருந்த பொழுதுகூட என்னை அடிக்கடி வந்து சந்திப்பாய். ஏதாவது விளக்கம் கேட்பாய்.. இங்கே வந்த பிறகு என்னை சந்திப்பது கூட அபூர்வமாக போய்விட்டது..நீ இப்பொழுது என்ன கேட்கப் போகின்றாய் என்பது எனக்குத் தெரியும். .இருந்தாலும் கேள்..என்றார்.வேறு ஒன்றும் இல்லை..இப்பொழுது உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? இரண்டு பேரும் அரண்மனையிலேதான் இருக்கிறோம்.நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள்..நான் அப்படி இருக்க முடிய வில்லை...இவ்வளவுக்கும் நீங்கள் முன்னர் இருந்தது போல் இல்லை..

தினமும் தங்கத் தேர் கேட்கின்றீர்கள்..உயர்தரமான ஆடைகள் அணிகின்றீர்கள்.சுவையான சாப்பாடு..இப்படி இருக்கின்ற பொழுது உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?இது தான் மன்னனின் கேள்வி.

இதற்குப் பதில் சொல்கின்றேன்..என்னுடன் புறப்பட்டு வா.. இந்த நகரத்திற்கு வெளியே போவோம்..என்று சொல்லி அரசனைக் கூப்பிட்டுக் கொண்டு ஊர் எல்லைக்கு போய் சேர்ந்தார்.அங்கே போய்ச் சொன்னார்.இதோ பார் இந்த இடத்தைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். இனிமேல் நான் திரும்பி வரப் போவதில்லை.நீ என்னுடன் வருகின்றாயா...திரும்பிப் போகின்றாயா? என்றார். நான் எப்படி உங்களுடன் வரமுடியும்..என்னுடைய நாடு...என்னுடைய சொத்துக்கள், மனைவி மக்கள்..எல்லாவற்றையும் விட்டுவிட்டு எப்படி வருவது? என்றான். இப்பொழுது அந்தத் துறவி சொன்னார்.


இப்பொழுது வித்தியாசத்தைச் தெரிந்து கொண்டாயா. நான் அரண்மனையிலே இருந்தேன்.எல்லாவிதப் பொருள்களும் உடையவனாக இருந்தேன்..ஆனால் ஒன்றையும் சொந்தம் கொண்டாடுகின்றவனாக இருக்கவில்லை.நீயோ எல்லாவற்றையும் சொந்தம் கொண்டாடுகின்றவனாக இருக்கின்றாய்..இது தான் நமக்குள்ளே வித்தியாசம் என்று சொன்னார். அரண்மனை ஆடைகளைக் களைந்தார். அரசனிடம் கொடுத்தார் உன்னுடைய ஆடைகளை நீயே வைத்துக் கொள் என்றார்.அவர் பாட்டுக்கு நடந்து போனார். திரும்பியே பார்க்கவில்லை.

அரசனுக்கு அப்போதுதான் தன்னுடைய அறியாமை விளங்கியது. இதிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்...இந்த உலகத்திலே எத்தனையோ பொருட்கள் அதையெல்லாம் முறையாக பயன்படுத்தினால் கொண்டாட ஆரம்பித்தால் கவலை.எங்கள் ஆட்கள் சொந்தம் கொண்டாடுகின்ற விதமே தனி.ஒரு ஆள்.. இன்னொருத்தனிடம் ஒரு குடை கடன் வாங்கியிருந்தான்.திருப்பிக் கொடுக்கவில்லை.குடையை கொடுத்தவன். கேட்டான்.என்னிடம் கடன் வாங்கினியே குடை அதைக் கொஞ்சம் திருப்பித் தருகின்றாயா? என்றான்.அது உனக்கு இப்பொழுது அவசரமாக தேவைப்படுகின்றதா? என்று கேட்டான் இவன். எனக்குத் தேவைப்படவில்லை..அந்தக் குடையை நான் யாரிடம் வாங்கியிருந்தேனோ அவனுக்கு இப்பொழுது அவசரமாக தேவைப்படுகின்றது என்றான் அவன்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

**15**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



பிற மாநிலங்கள் போர் மூலமாகவும் அல்லது அமெரிக்காவின் பிராந்தியங்களில் இருந்து பிரித்தும் உருவானவையாகும். விதிவிலக்குகளாக வெர்மான்ட், டெக்சாஸ் மற்றும் ஹவாய் ஆகிய மாநிலங்கள் அடங்கும். இந்த மாநிலங்கள் ஒன்றியத்தில் இணைவதற்கு முன்பு சுதந்திர குடியரசாக இருந்தவை. மற்றொரு வகை விதி விலக்கில் தொடக்கத்தில் இருந்த பதின் மூன்று மாநிலங்கள் அடங்கும்.

நாட்டின்வரலாற்று துவக்கத்தில்மூன்று வகையில் மாநிலங்கள் உருவாகின. ஒன்று வேர்ஜினியாவில் இருந்து கென்டக்கி வடக்கு கரோலினாவில் இருந்து டென்னெஸ் மசாசுசூட்ஸில் இருந்து மென். இரண்டாவது அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் போது, மேற்கு வேர்ஜினியா வேர்ஜினியாவில் இருந்து உடைந்தது. கடைசியாக ஹவாய் தனது மாநில அந்தஸ்தை ஓகஸ்ட் 21, 1959 அன்று பெற்றது. மாநிலங்களுக்கு ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல உரிமை இல்லை.

போர்டோ ரீகோ மற்றும் கரீபியனில் உள்ள அமெரிக்க வேர்ஜின் தீவுகள், அமெரிக்கன் சமோவா, குவாம் மற்றும் பசுபிக்கில் வடக்கு மரியானா தீவுகள் ஆகிய ஐந்து கடல் கடந்த பிராந்தியங்களையும் அமெரிக்கா கொண்டுள்ளது. இந்த பிராந்தியங்களில் பிறப்பவர்கள் (அமெரிக்கன் சமோவா தவிர) அமெரிக்க குடியுரிமை கொண்டவர்களாவர்கள்.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்கள் படம்-2




அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களும் பின்வருவனவாகும். 1.அலபாமா, 2.அலாஸ்கா, 3.அரிசோனா, 4.ஆர்கன்சஸ், 5.கலிபோர்னியா, 6.கொலராடோ, 7.கனெக்டிகட், 8.டெலவேர், 9.புளோரிடா, 10.ஜோர்ஜியா, 11.ஹவாய், 12.இடாகோ, 13.இலினாய், 14.இன்டியானா, 15.ஐயோவா, 16.கன்சாஸ், 17.கென்டகி, 18.லூசியானா, 19.மேய்ன், 20. மேரிலண்ட், 21.மசாசுசெட்ஸ், 22.மிஷிகன், 23.மினசோட்டா, 24.மிசிசிப்பி, 25. மிசௌரி, 26.மான்டனா, 27.நெப்ராஸ்கா, 28.நெவாடா, 29.நியூ ஹாம்ஷயர், 30.நியூஜெர்சி, 31.நியூ மெக்சிகோ, 32 நியூயோர்க், 33. வட கரோலினா, 34.வட டகோட்டா, 35.ஒஹாயோ, 36.ஒக்லஹாமா, 37. ஓரிகன், 38.பென்சில்வேனியா, 39.இறோட் தீவு, 40.தென் கரோலினா, 41. தென் டகோட்டா, 42. டென்னசி, 43. டெக்சஸ், 44. உட்டா, 45. வேர்மாண்ட், 46. வேர்ஜீனியா, 47. வோஷிங்டன் மாநிலம், 48. மேற்கு வேர்ஜீனியா, 49. விஸ்கொன்சின், 50.வயோமிங்.(படம்-2 ஐப்பார்க்க.)

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை எப்படி?

இதுபற்றி முன்னர் பார்த்தோம். இப்போது இன்னும் விரிவாகப் பார்ப்போம். இந்த தேர்தல் இந்தியா அல்லது இலங்கை போன்ற நாடுகளில் நடைபெறும் தேர்தல்கள் போலல்லாமல், சற்று வித்தியாசமாகவே நடக்கிறது. அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல்பலரும்நினைப்பதைப் போல நேரடியான வாக்களிப்பு மட்டும் அல்ல. போட்டியிடும் வேட்பாளர், நாட்டின் ஒட்டுமொத்த பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளை வாங்கினால் மட்டும் போதாது. அவர், மாநிலங்களில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) யில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதன் வாக்காளர் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இந்தியா அல்லது இலங்கை போன்ற நாடுகளில் நடைபெறும் தேர்தல்கள் போலல்லாமல், சற்று வித்தியாசமாகவே நடக்கிறது.**

"தேர்வு செய்வோர் அவை" (Electoral College) யில் பின்வரும் முறையில் வாக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாக்குகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது, ஒவ்வொரு மாநிலத்தின் மக்கள் தொகையைப் பொறுத்தது. இரண்டாவது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதிகப்படியாக இரண்டு வாக்குகள் அளிக்கப்படுகின்றன. அது மக்கள் தொகையைப் பொறுத்ததல்ல, நிலையானது.

எனவே, அமெரிக்காவின் ஐம்பது மாகாணங்களும் தலா இரண்டு வாக்குகள் பெற்று, மொத்தம் நூறு வாக்குகள் உள்ளன. இந்த இரண்டு வாக்குகளை மதித்தே, செனட் சபையில் மொத்தம் 100 செனட்டர்கள் இருக்கிறார்கள்.

செனட் சபையில் மக்கள் தொகை அதிகமாயுள்ள எந்த மாநிலத்திற்கும் தனி மதிப்பு இல்லை. அமெரிக்காவிலேயே மிக அதிக மக்கள் (39,512,224) தொகையுள்ள கலிபோர்னியாவுக்கும், மிகக்குறைந்த மக்கள் (578,759) தொகையுள்ள வையோமிங்குக்கும் தலா இரண்டு செனட்டர்கள்தான்.

பிரதிநிதிசபையில் மொத்தம் 435 பேர் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு 435 வாக்குகள். இந்த வாக்குகளின், அதாவது பிரதிநிதிகளின் எண்ணிக்கை மாறாது. ஆனால், மக்கள் தொகை மாற்றத்தை அனுசரித்து, ஒவ்வொரு மாநிலத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கைகளும் ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னாலும் மாற்றப்படும். (இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலுக்கு மாவட்டங்களுக்கு வருடாவருடம் ஆசனங்கள் ஒதுக்குவது போன்றது. இலங்கையில் மாவட்டத்திலுள்ள வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில், அமெரிக்காவில் மாநிலத்திலுள்ள சனத்தொகை அடிப்படையில்)

இத்துடன், ஒருங்கிணைந்த (Federal) அரசின் கீழுள்ள வோஷிங்டன் டி.சி (District of Columbia) க்கு அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலுக்கென்று 3 வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே தேர்வு செய்வோர் அவை மொத்த வாக்குகள் 538 (100+435+3) ஆகும். மொத்தம் 538 "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) வாக்குகளில் குறைந்தபட்சம் 270 வாக்குகள் பெற்றால்தான் அமெரிக்க ஜனாதிபதி ஆக முடியும்.

மாநிலங்கள் 50 இல் 48 மாநிலங்களில் மாநில வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவருக்கு, அந்த மாநிலத்தின் எல்லா அவை உறுப்பினர் இடங்களையும் தந்துவிடுகின்றன. இதற்கு "Winner takes all" என்று பெயர். (மாநிலத்தில் அதிக வாக்குகள் வென்றவருக்கு அந்த மாநிலத்தின் அனைத்து Electoral College இடங்களையும் வழங்குவது.) இதில் விதிவிலக்காக மெயின் மற்றும் நெப்ராஸ்கா மாநிலங்கள் உள்ளன. இவை இரண்டும் தங்கள் மாநிலத் தேர்தலில் எந்தத் தொகுதியில் எந்தக் கட்சி ஜெயிக்கிறதோ, அதைப் பொறுத்து அந்தக் கட்சியின் ஜனாதிபதியாகப் போட்டியிடுபவருக்கு "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) இடங்களை அளிக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் மக்கள் வாக்களிக்கும்போது, மாநில அளவில் மட்டும்தான் மக்களின் வாக்குகள் உபயோகமாகின்றன. அதாவது, மக்கள் வசிக்கும் - வாக்களிக்கும் மாநிலத்தில் வெற்றி பெறப்போவது யாரென்று அறிய மட்டும்தான் இந்த வாக்கு பயன்படும்.

மேலும் நாட்டில் பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, அதேசமயத்தில் சில மாநிலங்களில் தோற்றதன் மூலம், இந்த தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் தேவைப்படும் 270 வாக்குகளைப்பெற முடியாமல் போனால், வெற்றி வாய்ப்பை இழக்க நேரிடுகிறது. இவ்வாறு 4 முறை இடம்பெற்றதாக முன்னர் கூறியிருந்தேன்.

2016 தேர்தலில் ஹிலாரி கிளின்டன் பெற்ற வாக்குகள் 65,853,514 (48.18%), டொனால்ட் ட்ரம்ப் பெற்ற வாக்குகள் 62,984,828 (46.09%). ஹிலாரி கிளின்டன், டொனால்ட் ட்ரம்ப்பை விட 2.1% அதிக வாக்குகளைப் பெற்றும் தோல்வியடைந்தார்.

**2016 தேர்தலில் ஹிலாரி கிளின்டன் பெற்ற வாக்குகள் 65,853,514 (48.18%), டொனால்ட் ட்ரம்ப் பெற்ற வாக்குகள் 62,984,828 (46.09%). ஹிலாரி கிளின்டன், டொனால்ட் ட்ரம்ப்பை விட 2.1% அதிக வாக்குகளைப் பெற்றும் தோல்வியடைந்தார். ஏனெனில், 2016 தேர்தலில் ட்ரம்ப் 304 Electoral College வாக்குகளையும், ஹிலாரி கிளின்டன் 227 Electoral College வாக்குகளையும் பெற்றனர்.**

ஏனெனில், 2016 தேர்தலில் ட்ரம்ப் 304 Electoral College வாக்குகளையும், ஹிலாரி கிளின்டன் 227 Electoral College வாக்குகளையும் பெற்றனர், 7 உறுப்பினர்கள் மாறி வாக்களித்தனர். எனவே, இந்த Winner takes all மற்றும் "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) முறைகளில் சீர்திருத்தங்கள் தேவை என அமெரிக்காவில் அப்போதே பரவலான விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், எவ்வித மாற்றமும் இன்றி அதே முறையில் தான் இத்தேர்தலும் நடக்கிறது.

(தொடரும்...)

# கொரோனா கால போக்குவரத்து முறையை ஏற்க முடியாது

(கொழும்பு)


**போக்குவரத்துத்துறை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள போக்குவரத்து முறையை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.**

சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரஞ்சித் இதனை தெரிவித்துள்ளார். கொரோனா பரவலுக்கு மத்தியில் போக்குவரத்து அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள திட்டம், பேருந்துகளுக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துவோருக்கு மாத்திரமே சிறந்ததாக அமையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சு போலியான பேருந்து சங்கங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. அந்த சங்கங்களுக்கு பேருந்துகளை நடத்திச்செல்ல நிவாரணங்கள் அவசியமில்லை.

ஏனெனில் அவை மண்ணெண்ணெய் பயன்படுத்தியே பேருந்து சேவைகளை மேற்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## பலி பீடம்

(தொடர்ச்சி)

பலிபீடத்தை பொதுவாக பத்ரலிங்கம் என்று அழைப்பார்கள். பலிபீடம் அருகில் இருக்கும் நந்தி எனும் ஆன்மாவில் உள்ள ஆணவமலம், பலிபீடத்தில்தான் ஒதுங்கியிருக்கும். எனவே பலிபீடம் அருகே சென்றவுடன் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய நமது மும்மலங்களையும் பலியிடுதல் வேண்டும். "நான்" என்ற அகங்காரத்தை பலியிட வேண்டும்.

சிலர் எல்லாமே நம் ஒருவரால்தான் நடக்கிறது என்ற இறுமாப்புடன் இருப்பார்கள். அந்த இறுமாப்பை பலிபீடம் அருகில் நின்று பலியிட வேண்டும். பிறகு பலிபீடம் அருகில் தரையில் விழுந்து வணங்க வேண்டும்.

அந்த வழிபாடு எப்படி இருத்தல் வேண்டும் தெரியுமா?

ஆலயத்தின் கருவறை வடக்கு, மேற்கு திசையை பார்த்தபடி இருந்தால் பலி பீடத்தின் இடது பக்கத்திலும் கருவறை கிழக்கு மற்றும் தெற்கு நோக்கி இருந்தால் பலிபீடத்தின் வலது பக்கத்திலும் நின்று வணங்க வேண்டும். மூலவருக்கு அபிஷேகம் நடக்கும் போதோ அல்லது சுவாமிக்கு நைவேத்தியம் ப்டைக்கும் போதோ பலிபீடத்தை வழிபடுதல் கூடாது.

அதுபோல பலிபீட வழிபாட்டை ஒரு தடவை இரண்டு தடவை மட்டும் செய்து விட்டு நிறுத்தி விடக் கூடாது. 3, 5, 7, 9, 12 என்ற எண்ணிக்கையில் வணங்க வேண்டும்.

அந்த சமயத்தில் நம்மிடம் உள்ள காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யம் எனும் 6 கெட்ட குணங்களை பலியிடுவதாக உறுதி செய்து கொள்ள வேண்டும். பலிபீடத்தை வழிபட்டு முடித்ததும் நம் மனதில் மேலான எண்ணங்கள்தான் உள்ளன என்ற நினைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அந்த நல்ல மனநிலையுடன் கருவறை அருகில் சென்று இறைவனை வழிபடும்போது அவர் அருள் நம்மை ஆக்கிரமிக்கும் ஆசீர்வதிக்கும். பலி பீடத்தை பலிநாதர் என்றும் சொல்வார்கள். சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் பசு, பதி, பாசம் ஆகிய மூன்றில் பாசத்தை காட்டுவதால் இந்த பெயர் ஏற்பட்டது என்பார்கள்.

பலிபீடத்துக்கு மாயச் சக்கரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அதாவது நமது பிறப்பு-இறப்பு எனும் மாயச் சக்கரமாக பலிபீடத்தைக் கருதுகிறார்கள். இதைச் சுற்றி வந்து வழிபட்டால் "ஸ்தூல சூட்சம் காரண சரீரங்களில் இருந்து என்னை விடுவித்து விடு" என்று வேண்டுவதற்கு சமமாகும்.

பொதுவாக கோவில்களில் எட்டு மூலைகளில் எட்டு பலி பீடங்கள் அமைத்திருப்பார்கள். அவை இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனும் எட்டு திக் பாலகர்களை உணர்த்துகிறது. (திருவண்ணாமலையில் கிரிவலம் வரும்போது 8 திசைகளிலும் இந்த பெயர்களில் அஷ்ட லிங்கங்கள் அமைந்துள்ளன.)

இந்த எட்டு திக் பாலகர்கள் ஆலயப் பரிவார தேவதைகள் ஆவார்கள். எனவே இவர்களுக்கு அன்னம், தீர்த்தம் இடுதல் போன்றவைகளுக்கு பலி பீடங்கள் பயன்படுத்தப்படுகிறது. இந்த 8 பலி பீடங்களும் ஒவ்வொரு கோவிலின் ஆகம விதிகளுக்கு ஏற்ப கோவில் பிரகாரங்களில் அமைக்கப்பட்டிருக்கும்.

இவற்றுக்குத் தலைமைப் பலி பீடமாக நந்தி பின்புறம் உள்ள பலி பீடம் அமையும். பொதுவாக தலைமைப் பலி பீடம் மூலவமூர்த்தியின் பாதங்களைத் தாமரை வடிவில் தாங்கியதாக இருக்கும். சில கோவில்களில் பலி பீடத்தின் அடியில் பக்தர்கள் உப்பும் மிளகும் போட்டுச் செல்வார்கள். உப்பாகிய உடம்பையும் மிளகாகிய ஆணவத்தையும் இறைவனிடம் அர்ப்பணித்து விட்டேன் என்பதையே இது காட்டுகிறது.

சக்தித் தலங்களில் தலைமை பலி பீடம் தவிர பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி எனும் சப்த மாதாக்களை உணர்த்தும் பலி பீடங்களும் அமைத்திருப்பார்கள். அந்த பலி பீடங்களையும் மறக்காமல் வழிபட வேண்டும். பலி பீடம் முன்பு நின்று ஆத்மார்த்தமாக வழிபட்டால்.நம்மிடம் உள்ள தேவையற்ற காமம் போய் விடும், ஆசை போய் விடும், கோபம் போய் விடும், தீராத பற்று போய் விடும்.

கற்பு நெறி பிறழாத தன்மை உண்டாகும், பேராசை வரவே வராது, உயர்வு - தாழ்வு மனப்பான்மை விலகும், வஞ்சகக் குணம் வரவே வராது. ஆக பலி பீடம் மனிதனை மனிதனாக மாற்றுகிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

எனவே பலிபீடம் அருகில் நின்று நிதானமாக வழிபடுவதை பழக்கத்துக்கு கொண்டு வாருங்கள். அது உங்களை மேன்மைப்படுத்தும். அடுத்து பலி பீடத்தை கடந்ததும் வரும் மூலவரின் வாகனம் காணப்படும்.

ஒவ்வொரு கட வுளுக்கும் ஒவ்வொரு வாகனம் உண்டு. அதுபற்றி அடுத்ததாகப் பார்க்கலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## ஆட்டோ விபத்து குழந்தை மரணம்

(பதுளை)

பதுளை பகுதியில் இடம் பெற்ற ஆட்டோ விபத்தொன்றில் ஒரு வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளதுடன், மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை - மகியங்கனை வீதி யில் இந்த விபத்து நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றது. வீதியில் பயணித்த ஆட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் விழுந்து இந்த அனர்த்தம் இடம் பெற்றது.காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## 34 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 34இலங்கையர்கள், நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 12 பேர், கட்டாரிலிருந்து 22 பேர் இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்துள்ள அனைவருக்கும், பி.சி. ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

## பெண் கைது

(திருமலை)

திருகோணமலை நிலாவெளி பகுதியில் ஆயிரத்து 50 போதை மாத்திரைகளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நிலாவெளி ஆத்திமோட்டை பகுதியைச் சேர்ந்த 33 வயதான பெண்ணொருவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

விற்பனை நிலையம் ஒன்றில் பொருட்களை கொள்ளையிட்ட சந்தேகநபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய வீடொன்றினை சோதனையிட்ட போது இந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 140 | 150 |
| தக்காளி | 80 | 80 | 70-90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 90-100 | 60 |
| கோவா | 60 | 70 | 100 | 100 |
| கரட் | 100 | 180 | 180 | 200 |
| பூசணி | 60 | 50 | 50 | 80 |
| புடோல் | 50 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 260 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 130-160 | 180 |
| பாகற்காய் | 200 | 220 | 180 | 180 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 150 | 160-200 | 160 |
| லீக்ஸ் | 60 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 160 | 200 |
| போஞ்சி | 150 | 180 | 140-160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30-40 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இர்ாசவள்ளி | 250 | 250 | -- | 250 |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | — |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | -- | 120 |




# தவளையும் சுண்டெலியும்

அது ஒரு அழகிய குளம். அந்த குளத்திற்கு அருகில் ஒரு மரபொந்து ஒன்று இருந்தது. அந்த மரப்பொந்தில் சுண்டெலி ஒன்று வசித்து வந்தது.

அந்த சுண்டெலிக்கு குளத்தில் வசித்த தவளையுடன் நட்பு ஏற்பட்டது. தினமும் அந்த தவளையும் எலியும் சந்திப்பது வழக்கம்.

ஒரு நாள் எலி, தவளை நீரில் விளையாடிக் கொண்டிருப்பதை பார்த்தது. உடனே எலி தவளையிடம், "எனக்கும் நீச்சல் கற்றுத் தர முடியுமா?" என்று கேட்டது.

தவளையும், "நாளை உனக்கு நீச்சல் நான் கற்றுத் தருகிறேன்" என்று கூறி விட்டுச் சென்றது. அடுத்த நாள் சுண்டெலிக்கு நீச்சல் கற்றுத்தருவதாக கூறிய தவளை தன்னுடைய காலை எலியின் காலுடன் சேர்த்து ஒரு கயிற்றினால் கட்டிக்கொண்டது.


அப்போது மேலே பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று இவைகளைப் பார்த்து தாக்க வந்தது. உடனே தவளை தன் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது.

தண்ணீரில் மூழ்கிய சுண்டெலி மூச்சு திணறி இறந்துபோனது. அதன் உடல் மேலே மிதந்த போதும் அதனுடைய கால்கள் தவளையுடன் சேர்த்து கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தது.

அந்த சமயம்... தண்ணீரின் மீது சுண்டெலி செத்து மிதந்ததைக் கண்ட கழுகு கீழ் நோக்கி வந்து அந்த எலியைக் கொத்திக் கொண்டு உயரே பறந்தது.


அதனுடன் சேர்ந்து கட்டப்பட்டிருந்த தவளையும் பருந்தின் பிடியில் சிக்கியது. இரண்டு விருந்து கிடைத்த சந்தோசத்தில் பருந்தானது தவளையையும் கொன்று தின்றது.

**நீதி: நமக்கு தகுதியான வரை நண்பனாக ஏற்றுக் கொள்வதே சிறந்தது.**



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்



பிளேட்டோ

எல்லாக் கனவுகளையும் தூக்கி மூட்டையாகக் கட்டி ஓரமாக வைத்துவிட்டு அருகில் இருக்கும் லெஸ்போஸ் என்கிற தீவுக்குச் சென்று தன்னுடைய வாழ்க்கையை நகர்த்த முடிவு செய்தார். தான் மட்டும் சென்றார் மனைவியை விட்டுவிட்டு.

தீவுக்குச் சென்ற அரிஸ்ரோட்டில் அங்கிருந்தபடி கடல்வாழ் பிராணிகளைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளத் தொடங்கினார்.

நான் முடிவு செய்துவிட்டேன் அரிஸ்ரோட்டில் தான் என் மகனின் ஆசிரியர். அரண்மனை அதிரும் வகையில் உரக்கச் சொன்னார் மன்னர் பிலிப். அப்போது வீரர் ஒருவர் மன்னரிடம் விடயமொன்றை மெல்லிய குரலில் சொன்னார். அடுத்த நொடி மன்னரின் முகம் சுருங்கிவிட்டது.

விடயம் இதுதான். சில நாட்களுக்கு முன்பு நடந்த போர் ஒன்றில் ஸ்டாகிரா என்கிற ஊரை மாசிடோனிய வீரர்கள் தீயிட்டுக் கொளுத்தியிருந்தார்கள். ஸ்டாகிரா அரிஸ்ரோட்டிலின் சொந்த ஊர்.

ஒருவேளை மன்னர் பிலிப் அழைக்கும் நேரத்தில் தன்னுடைய சொந்த ஊரைத் தீயிட்டுக் கொளுத்தியதை மனதில் வைத்துக் கொண்டு மறுப்புத் தெரிவித்துவிட்டால் என்ன செய்வது என்பது தான் எல்லோருடைய கவலையாக இருந்தது. மன்னர் பிலிப்பும் இதையே தான் யோசித்தார்.

சட்டென்று ஓர் அறிவிப்பைச் செய்தார். இந்த நிமிடமே ஸ்டாகிரா நகரில் மறு நிர்மாணப் பணிகள் தொடங்கட்டும்.

இதுவரை அங்கு அடிமைகளாக இருந்த அத்தனைபேரும் இனிமேல் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கட்டும்.

உத்தரவு வெளிவந்த அடுத்த நொடியில் இருந்தே ஸ்டாகிரா நகரத்தில் மறுநிர்மாணம் செய்யும் பணிகள் தொடங்கின.

சில மாதங்களிலேயே ஸ்டாகிரா நகரத்துக்குப் புதுஇரத்தம் பாய்ச்சப்பட்ட தகவல் மன்னர் பிலிப்பை வந்தடைந்தது. உடனடியாக அரிஸ்ரோட்டிலுக்குக் கடிதம் ஒன்றை எழுதினார் மன்னர் பிலிப்.

மரியாதைக்குரிய அரிஸ்ரோட்டில் அவர்களுக்கு, தங்களுக்கு என்னுடைய மதிப்பு கலந்த வணக்கங்கள். எனக்கு ஆண்வாரிசு பிறந்திருக்கிறது.

அதைவிட எனக்கு மகிழ்ச்சிக்குரிய விடயம் தங்களைப் போன்ற மாமேதைகள் இருக்கிற காலகட்டத்தில் எனக்கு உருவானது தான்.

(தொடரும்)

நம் வாழ்வில் புதிய கருத்தை, புதியதை உருவாக்க முடியுமா என்று சிந்திப்பது ஒரு படைக்கும் சிந்தனை (Creative thought) தான். – கர்ம யோகி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்களுக்கு இந்தியாவும் தேவை அமெரிக்காவும் தேவை

அரசனை நம்பி புருசனைக் கைவிடாதே என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

உண்மையில் அரசை நம்பி புருசனைக் கைவிடாதே என்பதுதான் பழமொழி.

எனினும் அரசு என்பது அரசன் என்றாயிற்று.

குழந்தை இல்லாத குடும்பத் தலைவியர் விரதம் இருந்து அரச மரத்தைச் சுற்றி வலம் வந்து வழிபடுகின்ற முறைமையொன்று இருந்தது.

அந்த நடைமுறை இருந்த காலத்தில் எழுந்ததே இப்பழமொழி.

இங்கு அரச மரத்தைச் சுற்றி வலம் வந்து வணங்கினாலும் புருசனைக் கைவிட்டு விடாதே என்பது குறித்த பழமொழி தரும் பொருள்.

மேற்குறித்த பழமொழி கணவன் – மனைவி என்பதோடு மட்டும் தொடர்புபட்டதன்று.

மாறாக அந்தப் பழமொழியின் தத்துவத்தை நாம் சுவர்ந்து கவனிக்க வேண்டும்.

அதாவது அரச மரத்தை மட்டும் நம்பி இருப்பது மடமைத்தனம். அரச மரத்தை சுற்றி வழிபடுவதால் அரச மரத்துச் சூழலும் சுற்றி வலம் வருவதால் உடலுக்கு ஏற்படக்கூடிய பயிற்சிகளும் கருவளத்தை அதிகரிப்பதாக இருக்கலாம்.

அதற்காக அரச மரத்தைச் சுற்றி வலம் வருவது மட்டும் குழந்தைப் பேற்றைத் தந்து விட முடியாது.

ஆக, அரச மரத்தை நம்பி வழிபடுவதுடன் இல்வாழ்வுக்குரியவனையும் கைவிடாமல் இருத்தல் வேண்டும் என்பது பழமொழியின் நேரடிப் பொருள்.

மாறாக இதற்குள் பொதிந்துள்ள உள்ளகப் பொருள் இன்னும் காத்திரமானது.

அதாவது இப்போது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இவர் மட்டுமே நமக்கு உதவுவார் என்று நினைத்து இன்னொருவரை நாம் ஓரங்கட்டி விட முடியாது.

அதாவது அவரும் தேவை. இவரும் தேவை என்ற நிலைப்பாடு எங்களிடம் இருந்தாக வேண்டும்.

இதை இன்னும் தெளிவுபடுத்துவதாயின், ஈழத் தமிழர்களாகிய எங்களுக்கு இந்தியாவும் தேவை. அமெரிக்காவும் தேவை.

இவைமட்டும் தானா என்றால், இல்லை. கனடா, பிரிட்டன், பிரான்ஸ் இப்படி எல்லா நாடுகளதும் ஆதரவு நமக்குத் தேவையாக உள்ளது.

எனவே அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவாகி விட்டார் என்பதற்காக இனி எங்களின் பிரச்சினையை அமெரிக்கா பார்த்துக் கொள்ளும் என்று நினைத்து இந்தியாவை தவிர்க்க முடியுமா என்ன? எங்களுக்கு அண்டை நாடான இந்தியாவும் தேவை.

ஆக, உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழினம் உலக நாடுகளின் ஒட்டுமொத்த ஆதரவைப் பெறுவதில் அதீத கவனம் செலுத்துவதே புத்திசாலித்தனமாகும்.

## ❖பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை ❖வாகனம் தொற்று நீக்கிய சான்றிதழ் இருந்தால் மட்டுமே மன்னாருக்குள் செல்ல அனுமதி

(மன்னார்)

கொரோனா தொற்று பரவல் காரணமாக வெளி மாவட்டத்தில் இருந்து மன்னார் மாவட்டத்துக்குள் வியாபார நோக்கத்துடன் உள்நுழையும் வியாபாரிகள் மற்றும் வியாபார வாகனங்கள் அனைத்தும் மன்னார் முருங்கன் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பகுதியில் தொற்று நீக்கிய பின்னர் ஒரு மாத கால எல்லைக்குள் பெறப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கையுடன் வந்தால் மாத்திரமே மன்னார் மாவட்டத்துக்குள் உள்நுழைய அனுமதி வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவல் தொடர்பான அவசர மீளாய்வுக் கூட்டமானது மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் குணபாலன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜ் வினோதன், மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை பிரதிநிதிகள் பலரது பங்குபற்றுதலுடன் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் கொரோனாப் பரவல் காரணமாக நிறுத்தப்பட்டுள்ள மாவட்டங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்து சேவை தொடர்பாகவும் அவற்றை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவைகள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. (5-285)

## தொற்றுநோய் விசேட மருத்துவமனை இன்று திறப்பு

(அக்கராயன்)

வடக்கிற்கான தொற்றுநோய் விசேட மருத்துவமனை இன்று 11 ஆம் திகதி புதன்கிழமை (Infectious Disease Hospital for Northern Province) கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் திறந்து வைக்கப்படும்.

200 நோயாளர்கள் ஒரே நேரத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையானது எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கப்பட்டு அதிவிசேட தொற்று நோயியல் ஆய்வுகூடங்கள் மற்றும் சிறப்பு வசதிகளுடன் கொழும்பு தேசிய தொற்று நோய் சிறப்பு மருத்துவமனைக்கு (Infectious Disease Hospital- Colombo) ஈடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் சுகாதார துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதன்மூலம் தொற்று நோய்களுக்கான விசேட சிகிச்சைக்கு இதுவரை காலமும் கொழும்புக்குச் சென்ற வடபகுதி மக்கள் எதிர்காலத்தில் குறித்த வைத்தியசாலையிலேயே பலனடைய முடியும்.

அதாவது கொரோனாவுக்கு பின்னரும் குறித்த வைத்தியசாலை வடக்கிற்கான தொற்று நோயியல் விசேட வைத்தியசாலையாக இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் கொரோனா தொற்றுப்பரவல் ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் மத்திய சுகாதார அமைச்சின் ஊடாக உலக வங்கியிடம் வேலைத்திட்டத்திற்கான முன்மொழிவினைச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றதுடன், மிகக் குறுகிய காலத்தில் வைத்தியசாலையின் முதலாம் கட்டப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சரவணபவனின் அர்ப்பணிப்பு டன் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தமை பலராலும் பாராட்டப்படுகிறது.

(5-4-100-350)

## கரையொதுங்கிய மீன் குஞ்சுகள்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் பகுதியில் நேற்று ஆயிரக்கணக்கான மீன் குஞ்சுகள் கரையொதுங்கின.

நந்திக்கடலில் இருந்து இரட்டைவாய்க்கால் ஊடாக முல்லைத்தீவு பெரும் கடற்கரைக்கு சங்கமிக்கும் வாய்க்காலிலேயே இது இடம்பெற்றுள்ளது.

தொடர் மழையின் காரணமாகவே இம் மீன் குஞ்சுகள் உயிருடன் கரையொதுங்கியுள்ளன.

இவ்வாறு கரையொதுங்கிய உயிர் மீன்குஞ்சுகள் கெழுத்தி இன வகையைச் சார்ந்த மீன் குஞ்சுகளே ஆகும்.

இக் கரையொதுங்கிய மீன் குஞ்சுகளை பொது மக்கள் வலை வீசியும் பிடித்து வருகிறார்கள். (5-299)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை."
-கத்ரீனாமேயர் (அமெரிக்க எழுத்தாளர்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி வியாழன் காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** முள்ளியடி பிரதேசம், மண்டைதீவு, பூம்புகார், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கொக்கெலிய கிராமம், கொக்கெலிய இராணுவ முகாம், பண்டாரிக்குளம் கிராமம், குளோப் அரிசி ஆலை, கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, **Union Alliance Limited**, ஓமந்தை **Senok Trade**, ஓமந்தை **Technical College**, ஓமந்தை **AMP Ceylon Private Limited** வாரிக்குட்டியூர், நித்திய நகர், மணியர்குளம், எருக்கலங்கல், ரங்கெத்கம, சங்கராபுரம், கற்கடந்த குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிலாவத்துறையிலிருந்து முள்ளிக்குளம்வரை சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ரவீந்திரநாத் தாகூரின் ஆன்மீகச் சிந்தனைகள்

### அன்புப் பாலத்தில் பயணம் செய்

❖ தன்னம்பிக்கை என்னும் ஒளியோடு இருப்பவர்கள் வாழ்க்கைப் பாதையில் வெற்றிநடை போடுவார்கள். அவர்களால் மற்றவர்களுக்கும் வழிகாட்ட முடியும்.

❖ நாமோ கல்நெஞ்சம் கொண்டவர்களாக இருக்கிறோம். இறைவனோ, கருணை உள்ளம் கொண்டவனாக திகழ்கிறான்.

❖ பெண்கள் மகிழ்ச்சியோடு இருப்பதில் தான், ஒட்டுமொத்த குடும்பத்தின் மகிழ்ச்சியே அடங்கி இருக்கிறது. வாழ்வில் இசை என்பது, பெண்களின் சிரிப்பில் தான் புதைந்து கிடக்கிறது.

❖ இறைவன் தனக்கான நண்பர்கள் கிடைப்பார்களா? என்று தேடுகின்றான். மனித மனங்களில் அன்பு இருக்கிறதா என்று எதிர்பார்க்கிறான்.

❖ மனித உறவுகள் அன்பினால் பிணைக்கப்பட்டுள்ளன. அன்பு என்னும் பாலத்தின் வழியாகப் பயணம் செய்தால் தான், நம் வாழ்க்கை சுகமானதாக இருக்கும்.

❖ நிலத்தைப் பண்படுத்தும் உழவனிடமும், கல்லுடைக்கும் தொழிலாளியிடமும் இறைவன் இருக்கிறான்.

❖ உலகில் உள்ள அனைத்தும் இறைவனின் உறைவிடம் என்பதை உணருங்கள். அவன் அளிப்பதை அனுபவியுங்கள்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### பொங்கலோ பொங்கல்

❖ பொங்கலோ பொங்கல் என்று உற்சாகமுடன் கொண்டாடும் உழவர் திருநாளான பொங்கல் உழைப்பின் பெருமையை உணர்த்துகிறது.

❖ ஆரோக்கியம், நீண்ட ஆயுள் பெற விரும்புவோர் தினமும் நீராடியதும் கிழக்கு நோக்கி நின்று சூரியனை வழிபட வேண்டும்.

❖ தை முதல் ஆனி வரையுள்ள ஆறு மாத காலமான உத்ராயண புண்ணிய காலத்தில் சூரியன் தன் வடதிசைப் பயணத்தை மேற்கொள்கிறார்.


❖ குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து பொங்கலிடுவதோடு ஏழைகளுக்கு தர்மமும் செய்ய வேண்டும்

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## ஐந்தில் வந்தது குரு பகவான் அனைத்து நன்மையும் இனி கிடைக்கும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



கன்னி இராசி வசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று 5 ஆம் இடத்திற்கு வருகின்றார். அங்கிருந்து கொண்டு 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கின்றார். 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதற்கேற்ப, இனி அடுக்கடுக்கான நன்மைகள் உங்களைத் தேடிவரப்போகின்றது. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் குருவால், போராட்டமான வாழ்க்கை இனி பூந்தோட்டமாக மாறும். இழந்த பதவிகள் மீண்டும் கிடைக்கும். இல்லம் கட்டிக் குடியேறும் நிகழ்ச்சி இனிதே நடைபெறும்.

இந்தக் குருப்பெயர்ச்சிக் காலத்தில் சில மாதங்கள் 6 ஆம் இடத்திற்கு குரு சென்று சஞ்சரிக்கின்றார். சில காலங்கள் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். அதற்கேற்ற பலன்கள் உங்களுக்கு அமையும். சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவேறும். முன்னேற்றப் பாதையில் ஏதேனும் முட்டுக்கட்டை வருமேயானால் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடுவதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

### குருவின் பார்வை பலன்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசியைப் பார்ப்பதோடு 9, 11 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். இதனால் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். கூட்டு முயற்சியில் இருந்து விடுபட்டு, தனித்து இயங்க முற்படுவீர்கள். எதிரிகளின் பலம் குறையும். உறவினர்களும் நண்பர்களும் உதவிக்கரம் நீட்ட முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால், தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் விலகும். சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இதுவரை சகோதரர்களுக்குள் இருந்த பிரச்சினைகள் அகலும். தொழில் வளம் மிகச்சிறப்பாக இருக்கும். 'அஞ்சும், ஒன்பதும் மிஞ்சும் பலன்தரும்' என்பதால் புதிய ஒப்பந்தங்களும் வந்துசேரும். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும். முன்னோர்கள் செய்த தர்ம காரியங்களை, ஆன்மிகப் பணிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் லாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தொழிலை விரிவுபடுத்த கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பு உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு இப்பொழுது கிடைக்கும்.

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 4.1.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். பயண ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானம் என்று சொல்லக்கூடிய இடத்திற்கு அதிபதியான இவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, விரய்ங்கள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். மனை, வீடு, நிலம் வாங்குவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது, கல்யாணம் போன்ற சுபகாரியங்களை முன்னிட்டு சீர்வரிசை பொருட்களை வாங்குவது போன்ற சுபவிரயங்கள் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம்.

வெளிநாட்டில் இருக்கும் நண்பர்கள் மூலம் தொழில் தொடங்க உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தைப் பொறுத்தவரை உங் கள் திறமைக்கு ஏற்ற மதிப்பு கிடைக்குமா என்பது சந்தேகம் தான். மேலதிகாரிகள் உங்களுக்கு திடீரென இடமாற்றத்தைக் கொடுக்கலாம். தொழில் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (5.1.2021 முதல் 1.3.2021 வரை)**

சந்திரன், உங்கள் இராசிக்கு லாப ஸ்தானாதிபதி ஆவார். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும்.

'வெளிநாட்டில் தொழில் புரிய வேண்டும், ஏற்றுமதி வணிகம் செய்ய வேண்டும்' என்று நினைத்தவர்களுக்கு, அந்த முயற்சி இப்பொழுது கைகூடும். கூட்டாளிகள் பலரும் உங்களோடு வந்திணைய காத்திருப்பர். விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தியில் கவனம் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.




நீங்கள் கேட்ட சலுகைகளை வழங்க காத்திருப்பர். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2021 முதல் 4.4.2021 வரை, மீண்டும் 14.9.2021 முதல் 13.11.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், செவ்வாய். சகாய ஸ்தானம் மற்றும் அஷ்டம ஸ்தானத்திற்கு அதிபதியான இவரது சாரத்தில் குரு உலா வரும்பொழுது, நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். போட்டிகளுக்கு மத்தியில் உங்கள் முன்னேற்றம் உருவாகும். பொருளாதாரத்தில் ஏற்ற இறக்க நிலை இல்லாமல் இருக்க, அங்காரக வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. குடும்பத்தில் தேவைகள் அதிகரிக்கும்.

உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொண்டாலும் கூட, திடீர் திடீரென சச்சரவுகளும் ஏற்படும். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடத்தை அத்தியாவசியமாக விற்கும் சூழ்நிலை இப்பொழுது ஏற்படலாம். பணிபுரிவோருக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைத்து மனக் குழப்பத்தை அதிகரிக்கச் செய்யும்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (5.4.2021 முதல் 13.9.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவர் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. 'கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் 6இல் வரும்பொழுது யோகம் செய்யும்' என்பார்கள். இருப்பினும் இக்காலத்தில் உடல் நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். மனக்குழப்பமும், புதிய பிரச்சினையும் வந்து அலைமோதும். 'ஆறில் குரு, ஊரில் பகை' என்பது பழமொழி. எனவே மறைமுக எதிர்ப்புகள் உங்களுக்கு இக்காலத்தில் இருக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. இருப்பினும் குரு பார்வையால், மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு கிட்டும். தொழிலில் புதிய தொழிலாளர்கள் வந்திணைவர்.

### குருவின் வக்கிர இயக்கம்

16.6.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். உங்களைப் பொறுத்தவரை இந்த வக்கிர காலம், நன்மைகள் அதிகம் நடைபெறும் காலமென்றே கருதலாம். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பார்கள். 'வாங்கிப்போட்ட இடத்தில் வீடு கட்ட முடியவில்லையே, பிரச்சினை மேல் பிரச்சினை வந்து கொண்டு இருக்கின்றதே, எப்பொழுதுதான் இதற்கு விடிவு காலம் வருமோ' என்று நினைத்தவர்களுக்கு, இப்பொழுது கட்டடப் பணி தொடரும். கவலைகள் தீரும். குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்கும் வேலை கிடைத்து, அதன் மூலம் உதிரி வருமானங்களும் உண்டு. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

இல்லத்து பூஜை அறையில் மகாலட்சுமி படம் வைத்து, அஷ்டலட்சுமி வருகைப் பதிகம் பாடி வழிபடுவது நல்லது. மேலும் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு கவசம் பாடி, குரு பகவானையும் வழிபட்டால் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு, குரு பார்வை இருப்பதால் மகிழ்ச்சியும், பூரிப்பும் அதிகரிக்கும். எதிர்பாராத விதத்தில் எந்தவொரு காரியமும் எளிதில் முடிந்துவிடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவி ஒருவரையொருவர் புரிந்துகொண்டு நடப்பதன் மூலமும், விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமும் அமைதி குடிகொள்ளும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும்.

சகோதர ஒத்துழைப்பு பட்டும் படாமலும் இருக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த உயர்வுகளும் உண்டு.

(தொடரும்)

## குழிக்குள்...

பகுதியில் புதிதாக வெட்டப்பட்ட மலசலகூட குழியில் விழுந்து சிறுமி ஒருவர் பரிதாப மாக மரணமடைந்துள்ளார்.

நேற்றைய தினம் சிறுமியின் பெற்றோர் வெளியில் சென்ற நிலையில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி தவறுதலாக மலசலகூடக் குழியில் விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த சிறுமியின் உறவினர்கள் உடனடியாக சிறுமியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் குறித்த சிறுமி சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியைச் சேர்ந்த சத்தியசீலன் சஜீவினி (வயது-6) என்ற சிறுமியே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-250.299)

## காணி சுவீகரிப்பு...

முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் நிலஅளவைத் திணைக்களத்தினர் அளவீட்டு பணிக்காக வந்திருந்தனர்.

எனினும், காணி உரிமையாளர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அங்கு திரண்டு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து நிலஅளவையாளர் அளவீட்டை கைவிட்டதுடன், அளவீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக காணி உரிமையாளரிடம் எழுத்துமூலமாக பெற்றுக் கொண்டு திரும்பிச் சென்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், வேலணை பிரதேச சபை உறுப்பினர் நாவலன் உள்ளிட்ட பலர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஞா)


மஹஜன சம்பத
திகதி 2020/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 4302
P 5 9 5 3 6 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.11.10
சீட்டிழுப்பு இலக்கம் - 341
I 04 27 33 69
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 10-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2597
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
S 04 12 32 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0669
Z 21 01 06 24 56


## முஸ்லிம்களின்...

ரில் அடக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அதிகாரிகள் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக தெரிய வருகிறது.

இதேவேளை, முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நாளை நள்ளிரவில் வெளியிடலாம் எனவும் தெரிய வருகிறது.

சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு, இன்று புதன்கிழமை 11ஆம் திகதி கூடி, உடல்களை அடக்கம் செய்யும் இடம் தொடர்பான இறுதி முடிவெடுக்கப்படும்.

நாடு முழுவதும் கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் அனைத்தும் மன்னாரில் ஒரு பகுதியில் அடக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. (ஞா)

## 18 இந்திய மீன...

பரப்பில் கரையொதுங்கியுள்ளனர்.

நாட்டில் தற்போது சீரற்ற காலநிலை நிலவி வருவதன் காரணமாக இந்தியாவின் தமிழகத்திலிருந்து கடல் தொழிலுக்குச் சென்றவர்களின் படகுகளே இலங்கை கடற்பரப்பிற்குள் திசைமாறி வந்ததாக தெரிய வருகிறது.

இதில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பரப்பில் 4 மீனவர்கள் படகுடன் கரையொதுங்கினர். அவர்கள் கடற்படையினரிடம் சரணடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர சுண்டிக்குளம் கடற்பரப்பில் 14 மீனவர்கள் கரையொதுங்கி அவர்களும் கடற்படையினரிடம் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பிற்பகல் வரை அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஆனாலும் கடற்படையினர் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஞா-60)

## சீனியின் விலை...

நிர்ணயித்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்ட வர்த்தமானியின்படி இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது வர்த்தகர்கள் அதிகபட்ச விலைக்கு மேல் சீனியை விற்கவோ, வழங்கவோ அல்லது காட்சிப்படுத்தவோ முடியாது.

பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை சீனி ரூ.90, பொதி செய்யப்படாத வெள்ளை சீனி ஒரு கிலோ ரூ .85, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ வெள்ளை சீனி ரூ.80 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## விபசார விடுதி...

டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் உள்ள விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மிருசுவில் கரம்பகம் பகுதியில் உள்ள சிறிய குடிசை ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை மாலை ஆறு முப்பது மணியளவில் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது அக் குடிசையில் இருந்த இரண்டு பெண்கள், ஒரு ஆண் உட்பட வீட்டின் உரிமையாளருமான நான்கு பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஞா-60)

## இன்று முதல்...

சுகாதார அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகளின் அடிப்படையில் தற்போது எச்சரிக்கை நிலை 1 செயற்படுத்தப்படவில்லை என்றும், எச்சரிக்கை நிலை 2 இன் கீழ் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுமே பயணிகளை அனுமதிக்க வேண்டும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அதன்படி சாதாரண பேருந்துகளுக்கு இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமைய பயணிகள் அனுமதிக்கப்படுவதால் தற்போதுள்ள கட்டணத்தின் அடிப்படையில் 20 சதவீதம் அதிகரிக்கும் என்றும், தற்போது 12 ரூபாயாக இருக்கும் குறைந்தபட்ச கட்டணம் 14 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஞா)

## 5 பேர் பலி...

இதன்படி இராஜகிரியவில் உள்ள ஒரு வயோதிபர் இல்லத்தில் வசிக்கும் 51 வயது ஆண், ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் காலமானார்.

அவரது மரணத்திற்கு கோவிட்-19 தொடர்பான நிமோனியா காரணம் என்று திணைக்களம் கூறியது.

கொழும்பு - 10 இல் வசிக்கும் 45 வயது ஆண், ஒக்ரோபர் 23 அன்று கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கோவிட்-19 காரணமாக ஏற்படும் சுவாச நோயால் உயிரிழந்தார்.

கம்பஹாவின் உடுகம்பொலவில் வசிக்கும் 63 வயது பெண், கம்பஹா மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் காலமானார். கொரோனா வைரஸால் ஏற்படும் நிமோனியா காரணமாக அவர் இறந்துவிட்டதாக திணைக்களம் கூறியது.

மேலும், 55-60 வயதுக்கு இடைப்பட்ட ஒரு அடையாளம் தெரியாத ஆண் கோவிட்-19 தொற்றால் இறந்து பிரேத பரிசோதனையில் தெரிய வந்தது.

தமது வீட்டில் மரணமடைந்துள்ள நிலையில் இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஞா)

## கொரோ...

வேண்டும்.

அதிகாரிகளினால் இரண்டாவது கொரோனா அலையை கட்டுப்படுத்துவதற்காக மாறுபட்ட முறை ஒன்றை முன்னெடுப்பதாக காண முடியவில்லை.

நாங்கள் கூறும் விடயங்களுக்கு குறித்த பிரிவுகளிலுள்ளவர்கள் காது கொடுக்கவில்லை என்றால் இதனை கட்டுப்படுத்தும் முறையை கூறுவதிலும் பயனில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

## அபாயம் இல்லை...

தார விதிமுறைகளைப் பேணாமல் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் செயலாளர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார். (ஞா)

## 430 பேருக்கு...

கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 14 ஆயிரத்து 715 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 ஆயிரத்து 537 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். வைத்தியசாலைகளில் 5 ஆயிரத்து 17 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 41 பேர் உயிரிழந்துள்ளனர். (ஞா)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1272 நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 10.11.2020 தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
E 19 24 33 73
SUPER 500 7 9 0 2

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,882,980/=
திகதி : 10.11.2020
வெற்றி வாரம் : 2979
வர்ணம் : சிவப்பு
வெற்றி இலக்கங்கள் மகரம்
06 18 21 56
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,662,780

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1098
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.11.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 83,109,175/-
வெற்றி இலக்கங்கள்
56 63 67 74 F

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.10
சீட்டிழுப்பு இல.: 3428
வர்ணம் : இளநீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,664,305.20
வெற்றி இலக்கங்கள்
12 27 29 75 R
ரூ. 500/- 9925

ஜயோதா / லக்ன
649
10.11 2020
U 06 36 53 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,710,110
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# யாழில் தனிமைப்படுத்தலிலிருந்த 3 கிராமங்கள் இன்று விடுவிப்பு

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பாசையூர் மேற்கு, திருநகர் ஆகிய இரு கிராமங்களும், கரவெட்டியில் இராஜ கிராமமும் இன்று தனிமைப்படுத்தலில் இருந்து விலக்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இந்தக் கிராமங்களில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் கடந்த ஒக்டோபர் 29ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தப் பட்டதுடன், நோயாளிகளுடன் தொடர்புகளை பேணியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு சுகாதார பிரிவினால் கண்காணிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் 3 கிராமங்களிலும் தொற்றாளர்கள் எவரும் கண்டறியப்படாத நிலையில் இன்று புதன்கிழமை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன. (ஞ)

# வெளிமாவட்டங்களிலிருந்து வந்தோர் பதிவு கட்டாயம்

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் இருந்து நவம்பர் 7ஆம் திகதிக்கு பின்னர் வடமாகாணத்திற்குள் வந்தவர்கள் தற்போது தங்கியுள்ள பகுதிகளில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்ய வேண்டும் என மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், இவர்களை வீட்டில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது தொடர்பான முடிவுகளை அவர்கள் புறப்பட்டு வந்த பிரதேசங்களின் நோய் நிலைமைகளின் அபாயங்களைப் பொறுத்து சுகாதார மருத்துவ அதிகாரிகள் தீர்மானிப்பர்.

இவ்வாறு வேறு மாகாணங்களில் இருந்து தமது பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய தகவல்களை அவர்களோ அல்லது பொதுமக்களோ தமது பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் அல்லது வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24மணிநேர அவசர அழைப்பிலுள்ள 021 222 6666 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உங்களது விபரங்களை அறியத்தர வேண்டும் என தெரிவித்துள்ளார். (ஞ)

# கொரோனா வைரஸ் பரவல் 4 ஆம் நிலைக்குச் சென்றால் ஆபத்து

## வைத்தியர் ஜயருவான் பண்டார எச்சரிக்கை

(கொழும்பு)

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டாலும், கொவிட் பரவலில் இலங்கை மூன்றாம் கட்டத்தில் உள்ளது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் பொறுப்பற்று செயற்படுவோமானால் நான்காம் கட்டத்தை நோக்கி செல்ல வேண்டியேற்படும். அவ்வாறு நான்காம் கட்டத்திற்கு சென்றால் அது மிகவும் அபாயமானதாகும் என்று சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்தார். (ஞ)


## காணி விற்பனைக்கு வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோவில் சந்திக்கு அருகாமையில் ஆறு பரப்புக் காணி உள்ளது.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது.
ஒரு பரப்பின் விலை இருபத்து ஐந்து இலட்சம் (2,500,000/=)
( தரகர் தேவையில்லை. )
(4619)
குரு :077 623 4204, 077 585 8058



## காணி விற்பனைக்கு

சுற்றுமதில், கிணறு, மின்சார வசதி, ஒரு அறை மற்றும் தென்னை மரங்களுடன் கூடிய 03 பரப்புக் காணி (தாவடி - மானிப்பாய் வீதி ) சுதுமலையில் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
(4600)
070 237 0398


### யாழ். பல்கலையில்

# இன்று முதல் மீண்டும் பி.சி.ஆர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் இன்று புதன்கிழமை முதல் மீண்டும் பி. சி. ஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி. சி. ஆர் பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்யப்பட முடியும். மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப்படும் பி. சி. ஆர் பரிசோதனை முடிவுகள் தினமும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ். ரமேஸ் தெரிவித்துள்ளார். (ஞா-33)

# மரண அறிவித்தல்



## செல்வரட்ணம் சுரேஸ்

உரிமையாளர் – AVM Money Express Exchange Ltd - London, சமூகசேவையாளர்

**அன்னை மடியில் : 30.11.1969**
**ஆண்டவன் அடியில் : 03.11.2020**

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, மானிப்பாய், இலண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் சுரேஸ் (உரிமையாளர் – AVM Money Express Exchange Ltd - London, சமூகசேவையாளர் ) 03.11.2020 செவ்வாய்க்கிழமை இலண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணம் (அரசாங்க எழுதுவினைஞர் - கச்சேரி) - யோகம்மா (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியினரின் அருமைப் புதல்வனும் கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் சுகந்தியின் அன்புக் கணவரும் ஆதவன், சுருதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாசினி, சுபோதினி, சுரேசினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அன்ரன், ஜூட், நவநீதன், ஜெயந்தி, வசந்தி, சாந்தி, சயந்தி, ஜெயசங்கர், ரவிசங்கர், சிவசங்கர் ஆகியோரின் மைத்துனரும் சிறிசேயோன், சிவகுமாரன், சுந்தரமூர்த்தி, மகேஸ்வரன், சிவதர்சினி ஆகியோரின் சகலனும் சிவோன், சரண், Dr. சிரோமி, Dr. ஜெரோமி செகான் ஆகியோரின் மாமனாரும் பிரணவன், பிரவீன், ஜெனனி, தாரணி, சிந்துஜன், பிருந்தன், நிவின்சனா, நேருஜன், சங்கவி, விதுர்ஷிகா ஆகியோரின் சித்தப்பாவும் றொஷாந், சகானா ஆகியோரின் பெரியப்பாவும் சிவசுப்பிரமணியம், சிவபாலன் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2020) புதன்கிழமை இலண்டனில் உள்ள Bonsham Hall இல் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Croydon Cemetry க்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4595)

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

சுந்தரமூர்த்தி - 077 603 5548
ரவிசங்கர் - 077 844 9743

தகவல்:-
குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, நாயன்மார்கட்டு கேணியடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
1 பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
தரகர் தேவையில்லை.
(4619)
076 436 5814



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ராச வீதியில் 6 பரப்புக் காணி (மெயின் றோட்டுடன்) விற்பனைக்கு உண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.
யாழ்ப்பாணம், நீர்வேலி, கரந்தன் குறுக்கு வீதியில் 2 பரப்பு, 3 குளி காணி (ராசா கடை அருகாமை) விற்பனைக்கு உண்டு. மற்றும் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4619)
077 805 1655, 076 640 0974



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்



## புலமைப் பரிசில் வகுப்பு (2021)

- தனிப்பட்ட வகுப்பு
- வாராந்த மாதிரி வினாத்தாள் பரீட்சை
- அலகுப் பரீட்சை
- விசேட நுண்ணறிவுப் பயிற்சி
- பகுதி II இல் விசேட கவனம்

பாடசாலை ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். ஆசிரியர்
(4697)
074 045 4121



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ்
1150 /= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-505)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.